இன்றைய செய்தி நாளைய வரலாறு




கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 231 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 19 – திங்கள்கிழமை 01 ஏப்ரல் 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 231: Thiruvalluvar Year - 2055 - Panguni 19 - Monday 01 April 2024 - Madurai 12 Pages ₹ 5.00

# இந்தியாவை காக்க ஸ்டாலின் அழைக்கிறேன்



## திராவிட மாடல் அரசின்

## இரண்டரை ஆண்டு சாதனைகள்



1.15 கோடி குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்



உயர்கல்வி பயிலும் 2.73 லட்சம் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப் பெண் திட்டம்



உழவர் நலன் மேம்பாட்டிற்காக தனி நிதிநிலை அறிக்கை



மகளிர், திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் விடியல் பயணப் பேருந்து திட்டத்தில் சராசரியாக மாதம் ரூ.888 சேமிப்பு



16 லட்சம் பள்ளிக்குழந்தைகள் பயன்பெறும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்



9 லட்சத்து 61 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்து, 30 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு

## I.N.D.I.A. வெல்லட்டும்!

வாக்களிப்பீர்

## நாற்பதும் நமதே! நாடும் நமதே!

SLMC No.7/2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 01-04-2024

# வரி பயங்கரவாதம்

**பா.ஜ.க. தலைமையும், பிரதமர் நரேந்திர மோடியும் நிலைகுலைந்து போயிருக்கிறார்கள் என்பதற்கு உதாரணம், தவறுக்கு மேல் தவறு செய்து கொண்டு இருக்கிறார்கள். வருமான வரி கணக்கில் முரண்பாடு இருப்பதாகச் சொல்லி காங்கிரசு கட்சிக்கு 1,823 கோடி ரூபாயை அபராதம் விதித்துள்ளார்கள். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு அபராதம் விதித்துள்ளார்கள். நாடாளுமன்றத் தேர்தலில் இவர்கள் நிம்மதியாக பங்கெடுக்கக் கூடாது என்பதுதான் இதன் நோக்கம், வேறு எதுவுமில்லை!**

ஐ.நா.சபையே இதனைக் கண்டித்து விட்டது. "ஒரு நாட்டில் மக்களின் அரசியல் மற்றும் சிவில் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இந்தியாவில் அனைவரின் உரிமைகளும் பாதுகாக்கப்படும் என்று எதிர்பார்க்கிறோம். இந்தியாவில் சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும்" என்று ஐக்கியநாடுகள் அவை சார்பிலான அறிக்கை, மோடிக்கு எதிரான கண்டன அறிக்கையாகவே வெளியாகி உள்ளது. காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்கை முடக்கியதையும், அபராதம் விதித்ததையும், டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலை கைது செய்ததையும் சுட்டிக் காட்டி ஐ.நா. இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

**உலகநாடுகளால் பாராட்டப்படும் பிரதமர் என்று மோடியைச் சொல்லிக் கொள்கிறார்களே, அவர் ஐ.நா.அறிக்கைக்கு பதில் சொல்ல வேண்டாமா? உலக நாடுகள் மத்தியில் இந்தியாவின் மானம் காற்றில் பறக்கிறதே? இதற்கு யார் காரணம்? மோடிதானே!**

காங்கிரஸ் கட்சி 2018-19 ஆம் நிதியாண்டுக்கான வருமான வரிக் கணக்கை 44 நாட்கள் தாமதமாகத் தாக்கல் செய்து விட்டதாம். அதனால் அந்தக் கட்சியின் 4 வங்கிக் கணக்குகளை முடக்கி இருக்கிறார்கள். அதற்கு 210 கோடி ரூபாய் அபராதம் விதித்துள்ளார்கள்.

2017 -18

2018 - 19

2019 - 20

2020 - 21 - ஆகிய நான்கு நிதியாண்டுகளுக்கான வருமான வரிக் கணக்கிலும் முரண்பாடுகளாம். இதை வைத்து 1,823 கோடி ரூபாயை அபராதமாகச் செலுத்த வேண்டும் என்கிறார்கள். இதில் 1,076 கோடியே 35 லட்சம் ரூபாய் அபராதம்.மீதி உள்ள தொகை அதற்கான வட்டித் தொகையாம். இவை ஏற்கனவே நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்குகள் ஆகும். டெல்லி உயர்நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து தடை வாங்க காங்கிரஸ் கட்சிக்கு உரிமை இருக்கிறது. அதற்கான நேரத்தை காங்கிரஸ் கட்சி பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்காமல் அபராதம் போட்டுள்ளது பச்சை அரசியல் பழிவாங்குதல் அல்லவா? தேர்தலில் காங்கிரஸ் கட்சியை பங்கெடுக்க விடாமல் தடுக்கும் சூழ்ச்சி இது.

**காங்கிரஸ் கட்சியை அரசியல் ரீதியாக மக்கள் மன்றத்தில் எதிர்கொள்ள தைரியம் இல்லாமல், இப்படி கொல்லைப்புறம் வழியாக காங்கிரஸ் கட்சியை பலவீனப்படுத்தப் பார்க்கிறது பா.ஜ.க. 'வரி பயங்கரவாதம்' என்று குற்றம் சாட்டி இருக்கிறார் ராகுல் காந்தி.**

தேர்தல் பத்திர ஊழல் வழக்கில் சிக்கியது முதல் விழிபிதுங்கிக் கிடக்கிறது பா.ஜ.க. ரூ.8 ஆயிரம் கோடி பணத்தை தேர்தல் பத்திரங்களின் மூலமாக சுருட்டி இருக்கிறார்கள்.

**"தேர்தல் பத்திரங்கள் வழியாக நன்கொடை வழங்கியதன் மூலம் 38 கார்ப்பரேட் நிறுவனங்கள், 179 முக்கியமான ஒப்பந்தங்கள் மற்றும் திட்டங்களை மத்திய மற்றும் பா.ஜ.க. ஆளும் மாநில அரசுகளிடம் இருந்து பெற்றுள்ளது. இந்த நிறுவனங்கள் பா.ஜ.க.வுக்கு தேர்தல் பத்திரங்கள் மூலமாக ரூ.2,004 கோடி நன்கொடை வழங்கியதன் மூலமாக மொத்தம் ரூ.3.8 லட்சம் கோடி மதிப்புள்ள திட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்களைப் பெற்றுள்ளன.41 கார்ப்பரேட் நிறுவனங்கள் மொத்தமாக 56 முறை, அமலாக்கத் துறை, சிபிஐ, வருமான வரித்துறை சோதனைகளுக்கு ஆளாகியுள்ளன. இந்நிறுவனங்கள் பா.ஜ.க.வுக்கு ரூ.2,592 கோடி கொடுத்துள்ளன. இதில் ரூ.1,853 கோடி விசாரணை அமைப்புகளின் சோதனைக்குப் பின்னர் கொடுக்கப்பட்டுள்ளது"** என்று ஜெய்ராம் ரமேஷ் குற்றம்சாட்டி இருக்கிறார். இவை எல்லாம் வெளியில் பரவி வருகிறது. பா.ஜ.க.வின் ஊழல் முகம் அம்பலம் ஆகி வருகிறது. அதில் இருந்து திசை திருப்பவும் இதுபோன்ற நடவடிக்கையைச் செய்கிறார்கள்.

**"மதுபான முறைகேடு புகாரில் கைது செய்யப்பட்ட அரவிந்தோ ஃபார்மா இயக்குனரிடம் பா.ஜ.க. ரூ.55 கோடி தேர்தல் நன்கொடை பத்திரத்தை பெற்றுள்ளது. ரூ.55 கோடிக்கு பா.ஜ.க.வுக்கு தேர்தல் பத்திரம் வழங்கிய பின்னர் அரவிந்தோ ஃபார்மா இயக்குனர் ஜாமீனில் விடுவிடுக்கப் பட்டிருக்கிறார். மதுபான வழக்கு குற்றவாளியிடம் இருந்து ரூ.55 கோடி நன்கொடை பெற்றது குறித்து பிரதமர் மோடியும், பா.ஜ.க. தலைவர் நட்டாவும் விளக்கம் அளிக்க வேண்டும். இது குறித்து அமலாக்கத்துறையும் விளக்கம் அளிக்க வேண்டும்" - என்று ஆம் ஆத்மி கட்சி கோரிக்கை வைத்துள்ளது. பா.ஜ.க.வின் யோக்கியதை இதுதான்.**

டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டுள்ள மதுபான கொள்கை வழக்கில் மிக முக்கியக் குற்றவாளி ஒருவரின் பெயர் ரகாவா மாகுண்டா. இவர் அப்ரூவராக மாறிவிட்டார். இவரது தந்தை ஸ்ரீநிவாசலு, தெலுங்கு தேசம் கட்சி வேட்பாளராக ஆந்திராவில் போட்டியிடுகிறார். அவரை ஆதரிக்கிறது பா.ஜ.க. கட்சி. இவர்களது யோக்கியதை இதுதான்.

**ஏர் இந்தியா - இந்தியன் ஏர்லைன்ஸ் இணைப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு அமலாக்கத்துறை விசாரணையில் இருப்பவர் பிரபுல் படேல். இவர் இப்போது பா.ஜ.க. கூட்டணியில் இருக்கிறார். இந்த வழக்கை முடித்துக் கொள்கிறோம் என்று டில்லி ரோ அவென்யூ நீதிமன்றத்தில் சி.பி.ஐ. மனு போட்டுள்ளது. அவ்வளவு தான் பா.ஜ.க. வாஷிங் மிஷினில் பிரபுல் படேல் வெளுக்கப்பட்டு விட்டார். வெளியே வந்துவிடுவார். இவர்களது யோக்கியதை இதுதான்.**

இதையெல்லாம் மறைக்கவே காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்குகள் முடக்கப்படுகிறது. முடக்குவோர், விரைவில் முடக்கப்படுவார்கள்.

ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு கண்டனம்: 'இந்தியா' கூட்டணிக் கட்சிகள் சார்பில்

# டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் கைதை கண்டித்து மாபெரும் பேரணி - பொதுக்கூட்டம்!

## திருமதி சோனியா காந்தி - கட்சித் தலைவர்கள் பங்கேற்றனர்!

புதுடெல்லி, ஏப். 1–

டெல்லி மதுபான கொள்கை வழக்கில் முதல்வர் கெஜ்ரிவால் கடந்த மார்ச் 21ம் தேதி அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டார். தற்போது அமலாக்கத்துறையின் காவலில் அவர் இருந்து வருகிறார்.

அவரது கைதை கண்டித்து ஆம்ஆத்மி கட்சியினர் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் ஜார்க்கண்ட் முன்னாள் முதல்வர் ஹேமந்த் சோரன், டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் ஆகியோர் கைது செய்யப்பட்டதை கண்டித்து இந்தியா கூட்டணி சார்பில் 'ஜனநாயகத்தைக் காப்போம்!' என்ற முழக்கத்துடன் டெல்லியில் பேரணி மற்றும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திருமதி சோனியா காந்தி, காங்கிரஸ் தலைவர்கள் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி, தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார், திமு.க. சார்பில் திருச்சி என்.சிவா எம்.பி., சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே, சமாஜ்வாடி தலைவர் அகிலேஷ்யாதவ், பீகார் முன்னாள் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ், திரிணாமுல் காங்கிரஸ் மூத்த தலைவர் டெரிக் ஓ பிரையன், காஷ்மீர் முன்னாள் முதல்வர் பரூக் அப்துல்லா, ஜார்க்கண்ட் முதல்வர் சம்பாய் சோரன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் உள்ளிட்ட 28 கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்றனர். இக்கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் உரையை படித்து திருச்சி சிவா உரையாற்றினார். கெஜ்ரிவாலின் மனைவி சுனிதா கெஜ்ரிவால், ஹேமந்த் சோரனின் மனைவி கல்பனா சோரன் ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

'இந்தியா' கூட்டணியின் மார்க்சிஸ்ட் வேட்பாளர் சச்சிதானந்தத்தை ஆதரித்து

# திண்டுக்கல் தொகுதி - சின்னாளப்பட்டியில் தேர்தல் பிரச்சாரம்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி வாக்கு சேகரித்தார்!

*சின்னாளபட்டி, ஏப். 1-*

கைத்தறி நெசவாளர்கள், சுங்குடி தொழிலாளர்கள் வாழ்வாதாரத்தை காப்பாற்றி வருவது தி.மு.க. அரசு என்று திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதி தேர்தலில் போட்டியிடும் சி.பி.எம்.வேட்பாளர் ஆர். சச்சிதானந்தத்தை ஆதரித்து சின்னாளப்பட்டியில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தேர்தல் பிரச்சாரம் செய்தார்.

கைத்தறி நெசவாளர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித்தரப்படும் என்றதோடு சுங்குடி மற்றும் சாயத்தொழிலாளர்கள் நலன் காக்க நவீன சுத்திகரிப்பு நிலையம் அமைத்துக் கொடுக்கப்படும் என அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதியளித்தார்.

திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதியில் இந்திய கூட்டணியில் தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி கட்சி சார்பாக போட்டியிடும் சி.பி.எம்.கட்சி வேட்பாளர் ஆர். சச்சிதானந்தம் அவர்களை ஆதரித்து ஆத்தூர் கிழக்கு ஒன்றியம் சின்னாளப்பட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளான மேட்டுப்பட்டி சேவாசங்கம், காமராஜர் சாலை, கீழக்கோட்டை பொன்விழா மைதானம், பூஞ்சோலை பகுதிகளில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தேர்தல் பிரச்சாரம் செய்தார்.

பூஞ்சோலைப்பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்திற்கு ஆத்தூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன் தலைமை தாங்கினார்.

ஆத்தூர் ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி, சின்னாளப்பட்டி பேரூராட்சி மன்றத் தலைவர் பிரதீபா, துணைத்தலைவர் ஆனந்தி, சி.ஐ.டி.யூ கன்வீனர் வி.கே.முருகன், சி.பி.எம். ஒன்றியச் செயலாளர் சூசைமேரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.


சின்னாளப்பட்டி பேரூர்க் கழகச் செயலாளர் மோகன்ராஜ் வரவேற்றார்.

பூஞ்சோலைப்பகுதியில் கூடியிருந்த நூற்றுகணக்கான பொதுமக்கள் மத்தியில் பேசிய தி.மு.க. மாநில துணைப்பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி சின்னாளப்பட்டிக்கும் எனக்கும் 33வருட சொந்தம் உண்டு முதன் முதலாக நான் சட்டமன்ற உறுப்பினராக தி.மு.க. சார்பாக போட்டியிட்ட போது என்னை கைகொடுத்து தூக்கிவிட்டவர்கள் இங்குள்ள கைத்தறி நெசவாளர்களை நான் என்றைக்கும் மறக்க மாட்டேன். காரணம் தி.மு.க.வில் சித்தையன் கோட்டை மணிசெட்டியாரில் தொடங்கி ஏ.எம்.பி. நாச்சியப்பன் தற்போது வரை எனக்கும் தி.மு.க. விற்கும் ஆதரவு கொடுப்பவர்கள் சின்னாளப்பட்டி நகர மக்களே. கைத்தறி நெசவாளர்களுக்கு ஏதாவது பிரச்சினை என்றால் முதலில் குரல் கொடுப்பவர்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் அவர் வழியில் வந்த திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒருபடி மேலே போய் கைத்தறி துறையில் எண்ணற்ற நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். இங்குள்ள நெசவாளர்களில் வீடு இல்லாதவர்களுக்கு விரைவில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டிக்கொடுக்கப்படும் அதற்கென 9 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. இதுதவிர ஜவுளிபூங்கா அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதோடு தேர்தல் முடிந்தவுடன் பூஞ்சோலை பகுதியில் நெசவு பூங்கா திறக்கப்படும் என்றார்.

இங்குள்ள அருந்ததியர் காலனி மக்கள் தங்களுக்கு வீடு வசதி வேண்டுமென கோரிக்கை மனு கொடுத்துள்ளார்கள். அவர்களில் வீடு இல்லாத 80பேர்களுக்கு புதிய வீடுகள் கலைஞரின் கனவு இல்ல திட்டம் மூலம் கட்டிக்கொடுக்கப்படும். தி.மு.க. ஆட்சியின் போது ரூ.12கோடி மதிப்பில் நிலக்கோட்டை அருகே பேரணையிலிருந்து குடிதண்ணீர் கொண்டுவரப்பட்டது. தற்போது ரூ.553 கோடி மதிப்பில் வைகை அணையிலிருந்து குழாய்கள் மூலம் குடிதண்ணீர் கொண்டுவரப்பட்டு சின்னாளபட்டி மற்றும் திண்டுக்கல் மாநகர பகுதியில் வசிக்கும் மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் செய்ய நிதியை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள் விரைவில் அதற்கான பணிகள் தொடங்கப்பட உள்ளது.

வைகை அணையிலிருந்து குடிதண்ணீர் கொண்டு வந்து சின்னாளப்பட்டிக்கு விநியோகம் செய்யும் போது தினசரி பொதுமக்கள் குடிதண்ணீர்; பெறமுடியும் என்றார். மக்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்துவதில் தி.மு.க. அரசு என்றும் உறுதுணையாக இருக்கும் திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதியில் சி.பி.எம். கட்சி சார்பாக போட்டியிடும் வெற்றி வேட்பாளர் ஆர்.சச்சிதானந்தம் மண்ணின் மைந்தர் ஆவார். மற்ற வேட்பாளர்கள் வெளி மாவட்டங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவர்கள் தேர்தலுக்கு பிறகு அவர்களை சந்திக்க கூட நீங்கள் வெளியூருக்கு செல்ல வேண்டிய நிலைமை வரும் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரக்கூடிய சி.பி.எம். வேட்பாளர் ஆர்.சச்சிதானந்திற்கு நீங்கள் வாக்களிப்பதன் மூலம் மக்கள் விரோத ஆட்சியை விரட்டியடிப்பதோடு கைத்தறி நெசவாளர்கள் மற்றும் சுங்குடி தொழிலாளர்கள் நலனை காக்க முடியும் என்றார்.

தேர்தல் பிரச்சாரத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, சி.பி.எம்.கட்சி மாநில செயற்குழு உறுப்பினர்கள் கே.பாலபாரதி, கனகராஜ், மதுக்கூர் ராமலிங்கம், சி.பி.எம். ஒன்றியச் செயலாளர் சூசைமேரி, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பாஸ்கரன், தெற்கு மாவட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சி செயலாளர் தமிழரசன், மாவட்டச் செயலாளர் மைதீன்பாவா, சி.பி.ஐ. கட்சி மாவட்டச் செயலாளர் ஏ.பி.மணிகண்டன், ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் மணி, சிபிஎம். கட்சி மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள் வசந்தா மணி, செல்வராஜ், ஆசாத், மாவட்டக் குழு உறுப்பினர் சி.குணசேகரன், மாமன்ற உறுப்பினர்கள் நெல்லை சுபாஷ், ஆனந்தன், மாவட்ட கவுன்சிலர் பத்மாவதி, ஒன்றியக் குழு உறுப்பினர்கள் வண்ணம்பட்டி காணிக்கைசாமி, வக்கம்பட்டி காணிக்கைராஜ்,செல்வி காங்கேயன், பாப்பாத்தி, ஜோதி மலைச்சாமி, சின்னாளப்பட்டி பேரூர்கழக துணைச் செயலாளர் ஜெயகிருஷ்ணன், ஒன்றிய பிரதிநிதிகள் தம்பித்துரை, ரவிதண்டபாணி, வடக்குத்தெரு சந்திரன், தங்கப்பாண்டி, கிளைச் செயலாளர்கள் தங்கவேல், ஆர்.எஸ்.முருகன், சைக்கிள் கடை மணி, 8வது வார்டு முருகன், மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் கனகராஜ், பாரதிராஜா, உட்பட தி.மு.க. நிர்வாகிகள், மகளிர் அணியினர், இளைஞர் அணியினர் பலர் கலந்துகொண்டனர்.

## பெரியார் பண்படுத்திய மண் இது! நாட்டை மத அடிப்படையில் துண்டாட நினைக்கும் பா.ஜ.க.வின்

# மோடி மஸ்தான் வித்தையெல்லாம் இங்கு பலிக்காது!

## சேலம் தேர்தல் பிரச்சார பிரம்மாண்டப் பொதுக்கூட்டத்தில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அறைகூவல்!






கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.3.2024) சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன் பாளையத்தில் நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் சேலம் வேட்பாளர் செல்வகணபதியையும், கள்ளக்குறிச்சி வேட்பாளர் மலையரசனையும் அறிமுகப்படுத்தி இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், அமைச்சர் பெருமக்கள் .கே.என்.நேரு, .எ.வ.வேலு, மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆர்.இராஜேந்திரன், எஸ்.ஆர்.சிவலிங்கம், வசந்தம் கார்த்திகேயன், உதயசூரியன், நாடாளுமன்ற உறுப்பினர் பார்த்திபன், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் தங்கபாலு, மூவேந்தர் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் ஸ்ரீதர் வாண்டையார், ஒருங்கிணைந்த சேலம், கள்ளக்குறிச்சி மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

**சேலம், ஏப். 1-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையத்தில் நேற்று முன்தினம் (30.3.2024) மாலை, நடைபெற்ற ‘இந்தியா’ கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் சேலம் வேட்பாளர் செல்வகணபதியையும் - கள்ளக்குறிச்சி வேட்பாளர் மலையரசனையும் அறிமுகப்படுத்தி இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டு எழுச்சியுரையாற்றினார்.**

**அப்போது அவர், “தமிழ்நாடு எப்போதும் புண்ணிய பூமியாகத்தான் இருக்கும்... நாட்டை மத அடிப்படையில் துண்டாட நினைக்கும் பா.ஜ.க. பாவிகளின் மண்ணாக, மாறவே மாறாது! தி.மு.க. இருக்கும் வரைக்கும் உங்கள் மோடி மஸ்தான் வித்தையெல்லாம் பலிக்காது! இது, பெரியார் பண்படுத்திய மண்!” என்றும் “பா.ஜ.க.வைப் பற்றியும் மோடியைப் பற்றியும் பேச, எஜமான விஸ்வாசம் தடுக்கிறதா பழனிசாமி அவர்களே...!” என்றும் குறிப்பிட்டார்.**

கழகத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு: –

சேர்வராயன் மலை – கஞ்சமலை – சருகுமலை – கல்வராயன் மலை – பச்சமலை – நகரமலை என, இயற்கை எழில் கொஞ்சும் சேலத்திற்கு வந்திருக்கிறேன்!

### “சேலத்துச் சிங்கம்” வீரபாண்டியார் மாவட்டத்திற்கு வந்திருக்கிறேன்!

கழகத்தைக் கட்டிக்காத்த ‘சேலத்துச் சிங்கம்’ நம் நெஞ்சங்களில் கம்பீரமாய் வாழும் அண்ணன் வீரபாண்டியார் மாவட்டத்திற்கு வந்திருக்கிறேன்.

நமது வெற்றிக்குக் கட்டியம் கூறுவதற்கான, மண்டல மாநாட்டைப்போல் நடைபெறும் இந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள உங்கள் அனைவருக்கும் என் மாலை வணக்கம்!

### வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியினைத் தாரீர்!

இங்கு கூடியிருக்கும் உங்கள் முகங்களை எல்லாம் பார்க்கும்போது என்னுடைய நினைவுகள், சமீபத்தில் நடந்த இளைஞர் அணி மாநில மாநாட்டிற்குத்தான் செல்கிறது! சேலத்தில் எழுச்சியுடன் திரண்டிருந்த, திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் படையைப் பார்த்தபோது, “இப்படை தோற்கின் எப்படை வெல்லும்” என்றுதான் நினைத்தேன். இப்போது அந்தப் படை வெற்றி பெறுவதற்கான களத்துக்கு வந்துவிட்டது. வெற்றிக்குத் தயாராகிவிட்டீர்களா? சாதாரண வெற்றி அல்ல, வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை நீங்கள் தந்தாக வேண்டும்.

சேலம், கள்ளக்குறிச்சி தொகுதிகளின் களத்தின் வெற்றியை முன்பே அறிவித்ததைப்போல், இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ள, அமைச்சர் பெருமக்கள் ’மாநாட்டு நாயகன்’ கே.என்.நேரு அவர்களுக்கும், ’எதிலும் வல்லவர்’ எ.வ.வேலு அவர்களுக்கும், மாவட்டச் செயலாளர்களுக்கும், நிர்வாகிகளுக்கும், எனது வாழ்த்துகள்! பாராட்டுகள்!

### செயல்வீரர் செல்வகணபதியின் குரல் - நாடாளுமன்றத்திலும் ஒலிக்க வேண்டும்!

சேலம் வேட்பாளர் செயல்வீரர் செல்வகணபதிக்கு அறிமுகம் தேவையில்லை! டெல்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் பட்டறையில் இருந்து உருவான போர்வாள்தான், இங்கு உங்கள் முன்னால் இரு கரம் கூப்பி வாக்கு கேட்கும் நம்முடைய செல்வகணபதி அவர்கள்! சேலத்தில் எப்படி அவர் குரல் உறுதியாக ஒலிக்கிறதோ, அதேபோல் நாடாளுமன்றத்திலும் ஒலிக்க வேண்டும். அதற்குச் செல்வகணபதி அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் பெருவாரியான வாக்குகளை நீங்கள் வழங்கி வெற்றிபெற வைக்க வேண்டும்.

### மக்களின் தொண்டர் மலையரசனை மக்களவைக்கு அனுப்பி வைப்பீர்!

அதேபோல் கள்ளக்குறிச்சி கழக வேட்பாளரான மலையரசன், கழகத்தின் அடிமட்டத் தொண்டர்களில் ஒருவர்! ஒன்றியச் செயலாளரான இவர், தன்னுடைய சொந்த கிராமமான சிறுநாகலூர் ஊராட்சி மன்றத் தலைவராக இரண்டு முறை இருந்தவர். மாவட்டப் பிரதிநிதியாகவும் செயல்பட்டவர். இந்த மக்கள் தொண்டரையும், மக்களவைக்கு அனுப்பி வையுங்கள். வெற்றி வேட்பாளர் மலையரசன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்!

## மணிப்பூரில் பெண்கள் கொடுமைகளுக்கு ஆளாகிய போது - இரக்கமில்லாமல் அதனை வேடிக்கை பார்த்தது மோடி ஆட்சி!

உங்களின் முகங்களைப் பார்க்கும்போது இவர்களின் மாபெரும் வெற்றிதான் என் கண்ணுக்குத் தெரிகிறது! அந்த நம்பிக்கை பிறக்க இன்னொரு முக்கியக் காரணம் மூன்று ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தி வரும் நல்லாட்சி! தமிழ்நாட்டில் நடக்கும் உண்மையான மக்களாட்சி! ஏன், “உண்மையான மக்களாட்சி” என்று சொல்கிறேன் என்றால், நம்முடைய திராவிட மாடல் அரசுதான் மக்களின் நலனுக்கான திட்டங்களைச் செயல்படுத்தி, மற்ற மாநிலங்களுக்கு மட்டுமல்ல, நாட்டிற்கே முன்னோடியாகத் திகழ்கிறது!

### எப்படிச் செயல்படக்கூடாது என்பதற்கு எடுத்துக்காட்டு ஒன்றிய பா.ஜ.க.!

திராவிட மாடலின் குரல், தெற்கில் மட்டும் ஒலிக்கவில்லை; வடக்கிலும் ஒலிக்கிறது; வடக்கிற்கும் சேர்த்தே ஒலிக்கிறது! ஒரு மாநில அரசு எப்படிச் செயல்பட வேண்டும் என்பதற்கு நாம்தான் சிறந்த எடுத்துக்காட்டு! ஒரு ஒன்றிய அரசு எப்படிச் செயல்படக் கூடாது என்பதற்கு பா.ஜ.க. அரசுதான் எடுத்துக்காட்டு!

சில நாட்களுக்கு முன்னால், இதே சேலத்திற்கு வந்த பிரதமர் மோடி, “தமிழ்நாட்டில் பா.ஜ.க.வுக்குக் கிடைக்கும் ஆதரவைப் பார்த்து தி.மு.க.வின் தூக்கம் தொலைந்து விட்டது” என்று பேசிவிட்டுச் சென்றார்.

**மோடி அவர்களே, உண்மையில் உங்களால் தூக்கத்தைத் தொலைத்தவர்கள் யார் தெரியுமா? பத்தாண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் பெட்ரோல் – டீசல் விலையை உயர்த்தினீர்களே! அந்த சாமானிய மக்கள், தூக்கத்தைத் தொலைத்துவிட்டார்கள்! சிலிண்டர் விலையை உயர்த்தினீர்களே! தாய்மார்கள், ஏழைகள் தூக்கத்தை தொலைத்து விட்டார்கள்!**

**வேலையில்லாத் திண்டாட்டத்தால் இளைஞர்கள் தூக்கத்தை தொலைத்து விட்டார்கள்! ஜி.எஸ்.டி.யால் சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களை நடத்துகின்றவர்கள் தூக்கத்தை தொலைத்துவிட்டார்கள்!**

**மூன்று வேளாண் சட்டங்களால் உழவர்கள் தூக்கத்தைத் தொலைத்துவிட்டார்கள்!**

**தொழிலாளர் விரோத சட்டங்களால் பாட்டாளி மக்கள் தூக்கத்தைத் தொலைத்து விட்டார்கள்!**

**குடியுரிமைத் திருத்தச் சட்டத்தால் சிறுபான்மை மக்கள் தூக்கத்தைத் தொலைத்து விட்டார்கள்!**

**சமூகநீதிக்குச் சவக்குழி தோண்டுவதால் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின, பழங்குடியின மக்கள் தூக்கத்தைத் தொலைத்துவிட்டார்கள்!**

### தேர்தல் பத்திர ஊழலால் தூக்கத்தைத் தொலைத்த பிரதமர் மோடி!

**இப்படி, பத்தாண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் ஒட்டுமொத்த நாடுமே தூக்கத்தைத் தொலைத்துவிட்டு நிம்மதியில்லாமல் தவிக்கிறது.**

இப்படி நாட்டின் அமைதியையும் – மக்களின் நிம்மதியையும் கெடுத்த பா.ஜ.க. ஆட்சியை நடத்தும் பிரதமர் மோடி, இன்றைக்கு உச்சநீதிமன்றத்தால் வெளிவந்துள்ள தேர்தல் பத்திர ஊழலால் தூக்கத்தைத் தொலைத்துள்ளார்!

அதுமட்டுமல்ல, இன்னொரு முக்கிய காரணம் இருக்கிறது... அதுதான் பிரதமர் மோடிக்கு ஒன்றிய உளவுத்துறை கொடுத்திருக்கும் “ரிப்போர்ட்” என்று ஒரு செய்தி வருகிறது... அந்தச் செய்தி என்ன? ”தேர்தல் தேதி அறிவிப்பதற்கு முன்பு வரைக்கும் தென் மாநிலங்களில் பா.ஜ.க. வெற்றி பெற முடியாது என்பதுதான் நிலைமையாக இருந்தது! தேர்தல் பத்திர ஊழல் வெளிவந்த பிறகு, வட மாநிலங்களிலும் பா.ஜ.க. வெற்றி பெறாது என்பதுதான் உண்மையான நிலைமையாக இருக்கிறது!” என்று உளவுத்துறை ரிப்போர்ட் சொல்லியிருக்கிறது! இதனாலேயும், பிரதமர் மோடி தூக்கத்தைத் தொலைத்துவிட்டுப் பதறப்படுகிறார்!

## தனியார் துறையில் கழக அரசின் கடந்த மூன்றாண்டுகளில் 77 லட்சத்து 78 ஆயிரத்து 999 வேலைவாய்ப்புகள்!

### அமலாக்கத்துறையைப் பயன்படுத்தி அரசியல் கட்சிகளுக்கு மிரட்டல் - தொல்லை!

பதட்டத்தில் என்ன என்ன செய்கிறார்? ஜார்க்கண்ட் மாநிலத்தின் பழங்குடியின முதலமைச்சர் ஹேமந்த் சோரன் அவர்களையும், டெல்லியில் மாநில முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களையும் E.D.யை விட்டு, கைது செய்கிறார்கள்! காங்கிரஸ் கட்சிக்கும், கம்யூனிஸ்ட் கட்சிக்கும் வருமான வரித்துறையை ஏவி விட்டு, நோட்டீஸ் விடுகிறார்! எதிர்க்கட்சி எம்.பிக்கள் எதிர்த்துப் பேசினால், சி.பி.ஐ ரெய்டு விடுகிறார்! ஒருசில பத்திரிகைகள் இதைப் பற்றி விமர்சிக்கிறார்கள்! ஆனால் எதற்கும் பதில் இல்லை! தேர்தல் நேரத்தில், பா.ஜ.க.வுக்கு இப்படி கூட்டணிக் கட்சிகளைப் போல், E.D. – C.B.I. – I.T. ஆகியவற்றைப் பிரதமர் பயன்படுத்துகிறார் என்றால், உச்சக்கட்ட தோல்வி பயத்தில் இருக்கிறார் என்று அர்த்தம்!

எப்படியாவது ஆட்சிக்கு வர வேண்டும் என்ற வெறியில், பல தியாகங்களால் உருவான இந்திய ஜனநாயகத்தையே சீரழித்துவிட்டு இருக்கிறார். இதனால் ஒட்டுமொத்த இந்திய மக்களும் பா.ஜ.க.வின் சர்வாதிகாரப் போக்கின் மேல் கடும் கோபத்தில் இருக்கிறார்கள். அதனால்தான் இந்த நாட்டின் நிதியமைச்சர் உட்பட முன்னணி பா.ஜ.க.வினரும் தேர்தலில் போட்டியிடாமல் பின்வாங்குகிறார்கள்.

### பில்டிங் ஸ்ட்ராங்கு... பேஸ்மெண்ட் வீக்கு...

இங்கு தமிழ்நாட்டில் அதைவிடப் பரிதாபமாக இருக்கிறது பா.ஜ.க... ஒரு காமெடி வரும் ஞாபகம் இருக்கிறதா! “பில்டிங் ஸ்ட்ராங்கு... பேஸ்மெண்ட் வீக்கு” என்று... அதுபோல, தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பாளர் கிடைக்காமல் கவர்னர் – சிட்டிங் எம்.எல்.ஏ. என்று அழைத்து நிறுத்தி, செய்தியில் இருக்க வேண்டும் என்று பார்க்கிறார்கள்... இதிலிருந்து என்ன தெரிகிறது? பா.ஜ.க.வுக்கு இருக்கும் பயமெல்லாம், நோட்டாவை விடக் கீழே சென்றுவிடாமல் டெபாசிட்டாவது வாங்க வேண்டும் என்ற முயற்சிதான் நன்றாகத் தெரிகிறது! அதனால்தான், மோடி அவர்கள், இப்போது திடீர் என்று எம்.ஜி.ஆரையும் – ஜெயலலிதாவையும் புகழ்ந்து பேசுகிறார். திடீர் என்று அம்மையார் ஜெயலலிதா மேல் ஏன் மோடிக்குப் பாசம் பொங்குகிறது?

### “ஊழலாட்சி நடத்துகிறார் ஜெயலலிதா” என்று கூறியவர் பிரதமர் மோடி!

அம்மையார் ஜெயலலிதா உயிருடன் இருந்தபோது, அவரைப் பாராட்டியது உண்டா? “இந்தியாவிலேயே அதிகமாக ஊழல் நடைபெறும் ஆட்சி ஜெயலலிதா ஆட்சிதான்” என்று மோடி சொல்லியது இப்போது ஞாபகமில்லையா?

“தமிழ்நாட்டில் உள்கட்டமைப்பு வசதி ஏற்படாததற்கு ஒரு பெண்தான் காரணம்“ என்று அம்மையார் ஜெயலலிதாவை குறை சொன்னவர்தான் மோடி. ”தமிழ்நாட்டு மீனவர்கள் தாக்கப்படுவதற்கு ஜெயலலிதாவும் சோனியாவும்தான் காரணம்” என்று குற்றம் சாட்டியவரும் மோடிதான். இதையெல்லாம் பிரதமர் மோடி மறந்துவிட்டாரா? எதற்கு இந்த நாடகம்?

### பா.ஜ.க. ஆட்சியில் பெண்கள் அனுபவிக்கும் துன்பங்கள்!

அடுத்து, பெண் சக்தியைப் பற்றி சேலத்தில் பேசியிருந்தார்... உண்மையில், பா.ஜ.க. ஆட்சியில் பெண்களின் நிலைமை என்ன?

பெண்கள் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான காங்கிரஸ் கொண்டுவந்த ‘நிர்பயா’ நிதியை முறையாக ஒதுக்காமல் விட்டது பா.ஜ.க. ஆட்சிதான்.

பா.ஜ.க. எம்.பி.யால் மல்யுத்த வீராங்கனைகள் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளானது, அவர்கள் போராடியது எல்லாமே பா.ஜ.க. ஆட்சியில்தான்!

குஜராத்தில் பில்கிஸ் பானு வழக்கில் குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டது, மோடி ஆட்சியில்தான்!

மணிப்பூரில் பெண்கள் என்ன என்ன கொடுமைகளுக்கு ஆளாகினார்கள் என்று நம்முடைய எம்.பி.க்கள் குழு சென்று பார்த்து வந்து கதறினார்களே... அந்த கொடுமைகளை எல்லாம் இரக்கமில்லாமல் வேடிக்கை பார்த்தது மோடி ஆட்சிதான்!

ஜம்மு காஷ்மீரில், 8 வயதுக் குழந்தையை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கிய குற்றவாளிக்கு ஆதரவாக இரண்டு பா.ஜ.க. அமைச்சர்கள் ஊர்வலம் சென்றார்களே?

உத்தரப்பிரதேசத்தில் வேலை கேட்டுச் சென்ற இளம்பெண்ணை, பா.ஜ.க. எம்.எல்.ஏ குல்தீப் சிங்கும் அவரின் சகோதரரும், நண்பர்களும் சேர்ந்து கூட்டுப் பாலியல் வல்லுறவு செய்தார்களே? அதுமட்டுமா, அந்தப் பெண்ணின் தந்தையை அநியாயமாகச் சிறையிலேயே வைத்து கொன்றார்களே? பாலியல் வல்லுறவுக்கு உள்ளான ஒரு பெண்ணை நீதிமன்றத்திற்குச் செல்லும் வழியிலேயே உயிருடன் கொளுத்தினார்களே? அதுவும் பா.ஜ.க. ஆட்சியில்தான்!

இந்தச் செய்திகளுக்கு எல்லாம் பிரதமரிடம் இருந்து பதில் வந்திருக்கிறதா? வருத்தப்படுகிறேன் என்று பெயரளவுக்காவது சொல்லியிருக்கிறார்களா?

இந்த இலட்சணத்தில் பெண் சக்தி என்று பேசுவதற்கு உங்களுக்கும் – பா.ஜ.க. ஆட்சிக்கும் என்ன தகுதி இருக்கிறது? என்ன அருகதை இருக்கிறது?

அதுமட்டுமல்ல, “தமிழ்நாட்டைப் புண்ணிய பூமியாக மாற்றுவோம்” என்று பேசியிருக்கிறார். பத்தாண்டுகாலம் ஆட்சியில் இருந்தீர்கள். தமிழ்நாடு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட போது, இந்தப் புண்ணிய

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்

## பல தியாகங்களால் உருவான இந்திய ஜனநாயகத்தையே சீரழித்துவிட்டவர் பிரதமர் மோடி!

# மோடியின் கண்ணீரை அவரின் கண்களே நம்பாது! தமிழர்கள் எப்படி நம்புவார்கள்!

## சேலத்தில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... - 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

பூமிக்கு ஏன் வரவில்லை? பேரிடர் நிவாரணமாக ஒரு பைசாகூட ஏன் கொடுக்கவில்லை? 'எய்ம்ஸ்' மருத்துவமனையைப் பத்தாண்டுகளாக ஏன் இன்று வரைக்கும் கட்டவில்லை? மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம்கட்டப் பணிக்கு நான்கு ஆண்டுகளாக ஏன் நிதி கொடுக்கவில்லை?

**அமைதியான தமிழ்நாட்டை - சாதியின் பெயரால் பிரிக்க நினைக்கும் பா.ஜ.க.**

பிரதமர் மோடி அவர்களே... தமிழ்நாடு அய்யா ராமதாஸ் இன்றைக்கு என்ன சொல்லியிருக்கிறார்? "பா.ஜ.க. கூட்டணியில் பா.ம.க. வலிமையான கட்சியாக இருக்கிறது. அதனால், பா.ஜ.க.வுக்கு அழுத்தம் தந்து சாதிவாரிக் கணக்கெடுப்பை நிறைவேற்றுவோம்" என்று சொல்கிறார்.

ஆனால், பா.ம.க. கடந்த 3 தேர்தலாக தேசிய ஜனநாயகக் கூட்டணியில்தான் இருக்கிறது. உழவர்களுக்கு எதிரான 3 வேளாண் சட்டங்களுக்கும், இலங்கைத் தமிழருக்கும் - சிறுபான்மையினருக்கும் எதிரான குடியுரிமைத் திருத்தச் சட்டத்துக்கும் ஆதரவு தெரிவித்து வாக்களித்த பா.ம.க., ஏன் சாதிவாரிக் கணக்கெடுப்புக்கு அழுத்தம் கொடுக்கவில்லை?

டும் பாடியிருக்கிறார். "நாங்கள் அரசியலுக்கு வருவது; மக்களுக்குச் சேவை செய்வதற்குத் தானே தவிர; ஊர் சுற்றுவதற்காக அல்ல" என்று நானும் எத்தனை முறைதான் அவருக்கு விளக்குவது? தி.மு.க. என்பது கோடிக் கணக்கான தமிழ்நாட்டுக் குடும்பங்களை முன்னேற்றுவதற்குப் பாடுபடும் கட்சி! அது மோடிக்குப் புரியவில்லை!

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டில் சட்டம்ஒ

வழக்குகள் இருக்கிறது? என்று இந்தப் பட்டியலில் இருக்கிறது. எல்லா ரவுடிகளையும் உங்கள் கட்சியில் வைத்துக்கொண்டு சட்டம் ஒழுங்கைப் பற்றி நீங்கள் பேசலாமா? உங்களிடம் இருக்கும் உளவுத்துறை மூலமாக அந்தப் புத்தகத்தை வாங்கிச் சரிபார்த்துவிட்டு ("கிராஸ் வெரிஃபை" செய்துவிட்டு,) அதற்குப் பிறகு எங்களைப் பற்றிப் பேசுங்கள் பிரதமர் அவர்களே...



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (30.3.2024) சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன் பாளையத்தில் நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்திற்கு வருகை தந்த போது எழுச்சிமிகு வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஏற்கனவே புண்ணிய பூமியாகத்தான் இருக்கிறது! இங்கு எல்லோரும் சமத்துவமாக - சகோதரர்களாக - ஒற்றுமையாக இருக்கிறோம். அமைதியாக வாழும் தமிழ்நாட்டு மக்களை, மதத்தின் பெயரால் - சாதியின் பெயரால் பிரித்து, குளிர்காயலாம் என்று நினைக்கும் ஒரே கட்சி பா.ஜ.க.தான்!

இந்தத் தேர்தல் மட்டுமல்ல, இன்னும் நூறு தேர்தல்கள் நடந்தாலும் உங்கள் நாடகம் தமிழ்நாட்டில் எடுபடாது... இன்னும் சொல்ல வேண்டும் என்றால், தமிழ்நாடு எப்போதும் புண்ணிய பூமியா கத்தான் இருக்கும்... நாட்டை மத அடிப்படையில் துண்டாட நினைக்கும் பா.ஜ.க. பாவிகளின் மண்ணாக, மாறவே மாறாது!

> **சேலம், கள்ளக்குறிச்சி தொகுதிகளின் களத்தின் வெற்றியை முன்பே அறிவித்ததைப்போல், இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ள, அமைச்சர் பெருமக்கள் 'மாநாட்டு நாயகன்' கே.என்.நேரு அவர்களுக்கும், 'எதிலும் வல்லவர்' எ.வ.வேலு அவர்களுக்கும், மாவட்டச் செயலாளர்களுக்கும், நிர்வாகிகளுக்கும், எனது வாழ்த்துகள்! பாராட்டுகள்!**

**எண்ணற்ற பெருந்தலைவர்களின் உழைப்பு ஒருபோதும் வீணாகாது!**

நான் இன்னும் அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறேன்... இங்கு தி.மு.க. இருக்கும் வரைக்கும் உங்கள் மோடி மஸ்தான் வித்தையெல்லாம் பலிக்காது! இது, பெரியார் பண்படுத்திய மண்! பேரறிஞர் அண்ணாவால் கட்டமைக்கப்பட்ட மண்! நம் உயிரனைய முத்தமிழறிஞர் கலைஞர் வளர்த்த மண்! இது போன்ற எண்ணற்ற பெருந்தலைவர்களின் உழைப்பு ஒருபோதும் வீணாகாது!

பா.ஜ.க. எனும் மதவெறிக் கூட்டத்தோடு சேர்ந்திருப்பது யார்? நான் பெரிதும் மதிக்கும் சமூகநீதி பேசும் அய்யா டாக்டர் ராமதாஸ் அவர்கள் சேர்ந்திருக்கிறார். ஏன் சேர்ந்தார்? எதற்காக சேர்ந்தார் என்று உங்களுக்கும் தெரியும்! அவர்கள் கட்சிக்காரர்களுக்கும் நன்றாகத் தெரியும்! சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்த அய்யா ராமதாஸ் அவர்கள், அந்தக் கணக்கெடுப்பை நடத்த வேண்டாம் என்று சொல்லும் சமூகநீதிக்கு எதிரான பா.ஜ.க.விடம் சரண்டர் ஆகியிருக்கிறார். இதைப்பற்றி நேற்று தருமபுரி கூட்டத்தில் நான் மிகத் தெளிவாகப் பேசியிருக்கிறேன்.

அதற்கு விளக்கம் கொடுப்பதாக நினைத்து,

**கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன 'குடும்ப அரசியல்' பல்லவி!**

அதனால்தான், இந்த சந்தர்ப்பவாதக் கூட்டணியை ஏற்றுக் கொள்ள முடியாமல், அவர்கள் கட்சிக்காரர்களே மனம் நொந்து, அவமானத்தில் தலைகுனிந்து இருக்கிறார்கள்...

இன்று காலை நாளேடுகளில் மோடி அவர்கள் பேசிய பேச்சு வெளிவந்திருக்கிறது. தன்னுடைய தாய்மொழியாகத் தமிழ் வாய்க்கவில்லை என்று வருத்தப்பட்டுப் பேசியிருக்கிறார். நேற்று மாலையில் இதைப் பேசிய அவர், காலையில் என்ன செய்திருக்கிறார் தெரியுமா? "அகில இந்திய வானொலி" என்ற தமிழ்ப் பெயரை "ஆகாசவாணி" என்று இந்திப் பெயருக்கு மாற்றி உத்தரவு போட்டிருக்கிறார்.

"எங்கும் இந்தி எதிலும் இந்தி" என்று இந்தியைத் திணிப்பதற்கான வேலைகளைக் காலை பார்த்துவிட்டு மாலையில் கண்ணீர் வடிக்கிறார். இதற்குத்தான் சொல்வது... மோடியின் கண்ணீரை அவரின் கண்களே நம்பாது! தமிழர்கள் எப்படி நம்புவார்கள்? ஒருபக்கம் கண்ணைக் குத்திக்கொண்டு, மற்றொருப் பக்கம் கண்ணீர் வடிப்பது என்ன மாதிரியான தமிழ்ப் பாசம்?

அதுமட்டுமா, நேற்று மற்றொன்றையும் பேசியிருக்கிறார்... கேட்டுக் கேட்டுப் புளிச்சுப் போன குடும்ப அரசியல் பல்லவியையே மீண்டும் பாடியிருக்கிறார்.

முங்கு கெட்டுப்போய்விட்டது என்று புதிய அவதூறு பிரச்சாரத்தைக் கிளப்பியிருக்கிறார். அதற்கு ஏதாவது தரவுகளை ஆதாரமாகச் சொல்கிறாரா? இல்லையே!

பா.ஜ.க. ஆளும் மணிப்பூர் மாநிலம் பற்றி எரிந்தது! அப்போது நீங்கள் எங்கு சென்றீர்கள்? அந்த மாநில முதலமைச்சரைக் குறைந்தபட்சம் பதவி விலக வைக்க முடிந்ததா? இதுவரை நடக்காத கொடூரமாக, பெண்களை நிர்வாணப்படுத்தி ஊர்வலமாக அழைத்துச் சென்றார்களே, அப்போது சட்டம்ஒழுங்கு சந்தி சிரித்ததே... அப்போது ஒரு நாட்டின் பிரதமராக நீங்கள் என்ன செய்தீர்கள்? வாயே திறக்கவில்லையே!

**சட்டம் - ஒழுங்கைக் கெடுக்கும் ரவுடிகள் எல்லாம் - இன்று பா.ஜ.க.வில்!**

பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் போன்று, சட்டம்ஒழுங்கு சீர்குலையாமல் சமூக நல்லிணக்கத்துடன் மக்கள் வாழும் அமைதியான தமிழ்நாட்டை உங்களுக்குப் பிடிக்க வில்லையா?

என் கையில் ஒரு பட்டியல் இருக்கிறது... நான் ஆதாரத்துடன்தான் பேசுவேன். ஏனென்றால் நான் தலைவர் கலைஞரின் மகன். இதில் இருக்கும் பெயர்ப் பட்டியல் ஏதோ தேசத் தலைவர்களோ... சமூக சேவகர்களோ இல்லை... எல்லோரும் சட்டம்- ஒழுங்கைக் கெடுக்கும் ரவுடிகள்! சரித்திரப் பதிவேடு (History Sheet) குற்றவாளிகள்! ஆனால் இந்தப் பட்டியலில் இருப்பவர்கள் எல்லாம், இப்போது எங்கு இருக்கிறார்கள் தெரியுமா? அத்தனை பேரும் பா.ஜ.க.வில்தான் இருக்கி றார்கள்! வழக்கமாக இந்தப் பட்டியல் காவல் நிலையத்தில்தான் ஒட்டப்பட்டிருக்கும்...

32 பக்கங்கள் கொண்ட இந்தப் பட்டியலில், 1977 வழக்குகள் இருக்கும் 261 ரவுடிகள் இருக்கிறார்கள். இவர்களின் பெயர் என்ன? பா.ஜ.க.வில் என்ன பொறுப்பில் இருக்கிறார்கள்? இவர்கள் மேல் என்ன என்ன பிரிவுகளில்

**அவதூறுப் பிரச்சாரம் செய்வது - பிரதமர் பதவிக்கு அழகா?**

அடுத்து, போதைப் பொருட்கள் பற்றியும் பேசியிருக்கிறார். தி.மு.க.வில் இருந்த ஒருவர் மேல் இது தொடர்பாகக் குற்றச்சாட்டு எழுந்ததுமே, அந்த நபர அடுத்த விநாடியே கட்சியை விட்டு நீக்கிவிட்டோம். அவர் மீதான விசாரணைக்கு நாங்கள் தடையாக இல்லை... இந்த வழக்கை வைத்து, தமிழ்நாட்டில் போதைப் பொருள் நடமாட்டம் அதிகமாக இருப்பது போன்று அவதூறுப் பரப்புரை செய்கிறார். இது, அவர் இப்போது வகிக்கும் பிரதமர் பதவிக்கு அழகல்ல!

இந்தியாவிற்கே போதைப் பொருள் குஜராத் துறைமுகத்தில் இருந்துதான் வருகிறது என்று பிடிக்கிறார்கள்... ஒரு காலத்தில் குஜராத் முதலமைச்சராக இருந்ததே நீங்கள்தானே? இப்போதும் உங்கள் கட்சிதானே அங்கு ஆட்சியில் இருக்கிறது?... இது பற்றியாவது வாய் திறப்பீர்களா?

> **நான் சொல்வதை விட, தமிழ்நாட்டு மக்கள் என்ன கூறினார்கள் என்று ஒரு வீடியோ பார்த்தேன். அதில் ஒரு மகளிர் சொல்கிறார்: "எங்கள் வீட்டில், குழந்தைகளுக்கு உடம்பு சரியில்லை யென்றால், காசிற்காக யாரையும் எதிர்பார்க்க வேண்டிய தேவை இனிமே இல்லை. எங்கள் அண்ணன் ஸ்டாலின் கொடுக்கும், தாய்வீட்டுச் சீர் மாதிரி 1000 ரூபாய் இருக்கிறது!" என்று மகிழ்ச்சியோட கூறுவதைப் பார்த்தேன். இப்படி மாதா மாதம், மாநிலம் முழுவதும் ஒரு கோடியே 15 இலட்சம் குடும்பங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்!**

பா.ஜ.க ஆளும் மாநிலங்களில்தான் நாட்டிலேயே போதைப் பொருள் அதிகம் விற்பனையாகிறது என்று ஒரு புள்ளிவிவரம் வந்திருக்கிறது... அது எதுவும் நாங்கள் சொன்னது இல்லை... மாநிலங்களவையில் கடந்த டிசம்பர் மாதம் உங்கள் ஆட்சி சார்பில் ஒன்றிய அரசு வைத்த அறிக்கையில் இருக்கிறது.

அதுமட்டுமில்ல, போதைப் பொருள் அதிகமாக கைப்பற்றப்பட்ட 'டாப் 10' மாநிலங்களில் ஏழு மாநிலங்களில் பா.ஜ.க. ஆட்சிதான் நடக்கிறது! இந்தப் பத்து மாநிலங்களில் 'தமிழ்நாடு' என்ற பெயரே இல்லை! அந்தளவுக்குக் கடுமையான நடவடிக்கைகளை நமது திராவிட மாடல் அரசு எடுத்து வருகிறது.

பிரதமர் மோடி அவர்களே... உங்கள் ஆட்சி அறிக்கையிலேயே இல்லாத தமிழ்நாட்டைப் பற்றி அரசியல் ஆதாயத்திற்காக இப்படி பொய்க் குற்றச்சாட்டை வைக்கிறீர்களே... உங்களுக்குத் தமிழ்நாட்டு மக்கள் மேல் அப்படி என்ன கோபம்? இது மாதிரியான அபாண்டமான குற்றச்சாட்டுகளைச் சொல்லி, தமிழ்நாட்டு மக்களையும் எங்கள் இளைஞர்களையும் ஏன் அவதூறு செய்கிறீர்கள்?

**போதைப் பொருள் வழக்கு - இங்கு 14 பா.ஜ.க. வினர் சிறையில்!**

மாண்புமிகு பிரதமர் அவர்களே... உங்களுக்குச் சொல்லப்படாத ஒரு தகவலைச் சொல்கிறேன்... போதைப் பொருள் தொடர்புடைய வழக்குகளில் பா.ஜ.க.வைச் சேர்ந்த 14 பேர் இங்கு சிறைகளில் இருக்கிறார்கள். அதற்கும் ஆதாரம் இருக்கிறது. இதற்குப் பிரதமர் மோடி என்ன விளக்கம் அளிப்பார்?

பிரதமர் என்பது ஒரு உயர்ந்த பதவி! இது வரைக்கும் எத்தனையோ பிரதமர்களின் தேர்தல் பிரச்சாரங்களைப் பார்த்திருக்கிறோம்... அவர்கள் ஆட்சியில் நாட்டிற்குச் செய்ததைச் சொல்வார்கள்... அடுத்து ஆட்சிக்கு வந்தால் என்ன செய்யப்போகிறோம் என்று சொல்வார்கள்... ஆனால் பிரதமர் மோடி சாதனைகள் சொல்ல வழியில்லை என்று வாய்க்கு வந்ததைப் பேசுகிறார்.

**பா.ஜ.க. வுடன் பழனிச்சாமியின் கள்ளக் கூட்டணி!**

இப்படிப்பட்ட மோடி அவர்களின் கூட்டணியில் இருந்துகொண்டு, இப்போது அவரின் டைரக்‌ஷனில் 'கள்ளக்கூட்டணி' நாடகம் போடும் பழனிசாமி என்ன செய்கிறார்? காலையில் 'இந்து' நாளேட்டுக்கு ஒரு பேட்டி கொடுத்திருக்கிறார். அதில் "ஏன் பா.ஜ.க.வை எதிர்ப்பதில்லை?" என்று அவர்கள் கேட்டால், "தி.மு.க. - தி.மு.க." என்ற தேய்ந்துபோன பழைய ரெக்கார்டு மாதிரியே பேசிக் கொண்டு இருக்கிறார். பா.ஜ.க.வைப் பற்றியும் மோடியைப் பற்றியும் பேச, எஜமான விஸ்வாசம் தடுக்கிறதா பழனிசாமி அவர்களே...

**ஒட்டுமொத்த நிர்வாக இயந்திரமும் முடங்கிய ஆட்சி பழனிசாமியின் ஆட்சி!**

உங்கள் தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சிதான் தமிழ்நாட்டின் இருண்ட காலம். தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு; கொடநாடு கொலை, கொள்ளை, தற்கொலை; பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை; தலைமைச் செயலகத்தில் ரெய்டு; அமைச்சர் மற்றும் டி.ஜி.பி. மீது குட்கா வழக்கு; பெண் எஸ்.பி.க்குப் பாலியல் வன்முறை; சட்டம்-ஒழுங்கு என்பதே இல்லாமல், ஒட்டுமொத்த நிர்வாக இயந்திரமும் முடங்கிய ஆட்சிதான் பழனிசாமியின் ஆட்சி!

**தமிழ்நாட்டின் பொற்காலம் - தி.மு.க. ஆட்சி!**

தான் பதவிசுகம் அனுபவிக்கத் தமிழ்நாட்டின் உரிமைகளை அடகு வைத்தவர்தான் பழனிசாமி! இப்படிப்பட்ட பழனிசாமிக்கு மக்களும் வாக்களிக்கத் தயாராக இல்லை! உண்மையான அ.தி.மு.க. தொண்டர்களும் தயாராக இல்லை!

தமிழ்நாட்டின் பொற்காலம் என்பது தி.மு.க. ஆட்சிதான்! தமிழ்நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கியது தி.மு.க. ஆட்சியில்தான்! தமிழ்நாட்டின் கல்வி அறிவு உயர்வுக்கு வித்திட்டது தி.மு.க. ஆட்சிதான்! தமிழ்நாட்டுக்கு எண்ணற்ற முத்திரைத் திட்டங்களை நிறைவேற்றியது தி.மு.க. ஆட்சியில்தான்! இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்தது தி.மு.க. ஆட்சிதான்.

**"எல்லோருக்கும் எல்லாம்" எனும் திராவிட மாடலில் தமிழ்நாட்டின் வளர்ச்சி!**

சமீபத்தில் ஒரு செய்தியைப் படித்திருப்பீர்கள்...

தொடர்ச்சி 5 - ஆம் பக்கம்

### நாடாளுமன்றத் தேர்தல் – கழகத் தலைவர்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நாளைய பிரச்சாரம்!



2024 ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரித்து வருகிறார்.

கழகத் தலைவர் அவர்கள் மேற்கொள்ளும் நாளைய தேர்தல் பிரச்சாரப் பயண விவரம் :-

| தேதி | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|
| 02.04.2024 (செவ்வாய்க்கிழமை) - | வேலூர் |
| | அரக்கோணம் |



## ஈரோட்டில் வேட்பாளர் கே.இ. பிரகாஷை ஆதரித்து பொதுமக்களிடம்

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தீவிர வாக்கு சேகரிப்பு!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.03.2024) ஈரோடு மக்களவை தொகுதி கழக வேட்பாளர் பிரகாஷ் அவர்களுக்கு ஆதரவாக ஈரோடு மாவட்டம் சம்பத் நகர், உழவர் சந்தையில் வியாபாரிகள் மற்றும் பொது மக்களிடம் வாக்கு சேகரித்தார். உடன் அமைச்சர் சு.முத்துசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் ப. செல்வராஜ் ஆகியோர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம் நேற்று (31.03.2024) சம்பத் நகர் நடைப்பயிற்சியின் போது கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களுடன் பொது மக்கள் மகிழ்ச்சியுடன் செல்ஃபி எடுத்துக் கொண்டனர். உடன் அமைச்சர்கள் முத்துசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் ப. செல்வராஜ், ஈரோடு மக்களவைத் தொகுதி கழக வேட்பாளர் பிரகாஷ் ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.03.2024) ஈரோடு மக்களவை தொகுதி கழக வேட்பாளர் பிரகாஷ் அவர்களுக்கு ஆதரவாக ஈரோடு மாவட்டம் சம்பத் நகர், உழவர் சந்தையில் வியாபாரிகள் மற்றும் பொது மக்களிடம் வாக்கு சேகரித்தார். உடன் அமைச்சர் சு.முத்துசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் ப. செல்வராஜ் ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.03.2024) ஈரோடு மக்களவைத் தொகுதி கழக வேட்பாளர் பிரகாஷ் அவர்களுக்கு ஆதரவாக ஈரோடு மாவட்டம் சம்பத் நகர், உழவர் சந்தையில் வியாபாரிகள் மற்றும் பொது மக்களிடம் வாக்கு சேகரித்தார். உடன் அமைச்சர் சு.முத்துசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் ப. செல்வராஜ் ஆகியோர் உள்ளனர்.

# “பெண் சக்தி” என்று பேசுவதற்கு - பா.ஜ.க. ஆட்சிக்கு என்ன தகுதி, அருகதை இருக்கிறது?

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... - 4 ஆம் பக்கத் தொடர்ச்சி

உலகத் தொழிலாளர் அமைப்பு சமீபத்தில் வெளியிட்ட புள்ளிவிவரம் ஒன்றில், “வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்திருக்கிறது” என்று சுட்டிக் காட்டியிருக்கிறது. அதில், 83 விழுக்காடு இளைஞர்கள் வேலையின்றித் தவிப்பதாக வேதனையான செய்தியை வெளியிட்டிருக்கிறது. போலியான பிம்பங்களால் கட்டமைக்கப்பட்ட மோடி மாடல் இன்றைக்கு அம்பலப்பட்டு நிற்கிறது.

அதேசமயம், “எல்லோருக்கும் எல்லாம்” என்ற கொள்கையில் நாம் செயல்படுத்தி வரும் திராவிட மாடலில் தமிழ்நாடு எத்தகைய வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதுவும், ஒன்றிய அரசின் புள்ளிவிவரம் ஒன்றை வைத்தே இதனை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். பத்தாண்டுகளாக அ.தி.மு.க. ஆட்சி சீரழித்த தமிழ்நாட்டை மீட்டுக் கடந்த மூன்று ஆண்டுகளாகப் பல்வேறு தொழிற்சாலைகளைத் தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்து இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இதனால், வேலைவாய்ப்பைப் பெற்ற இளைஞர்கள் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தில் (EPF) அக்கவுண்ட் தொடங்கியிருக்கிறார்கள்.

இப்படி, கடந்த மூன்று ஆண்டுகளில் கிடைத்திருக்கும் வேலைவாய்ப்பு மட்டும் எவ்வளவு தெரியுமா? நமது அரசு பொறுப்பேற்ற இந்த மூன்று ஆண்டுகளில் 77 இலட்சத்து 78 ஆயிரத்து 999 புதிய வேலைவாய்ப்புகள் தனியார் துறைகளில் உருவாக்கப்பட்டிருக்கிறது என்று அந்தப் புள்ளி விவரம் சொல்கிறது. இப்படி திட்டங்களாலும் செயல்பாடுகளாலும் உண்மையாகவே சாதனைகளை நிகழ்த்தும் மாடல் தான் நமது ”திராவிட மாடல்”.

நான் சொல்வதை விட, தமிழ்நாட்டு மக்கள் என்ன கூறினார்கள் என்று ஒரு வீடியோ பார்த்தேன். அதில் ஒரு மகளிர் சொல்கிறார்: “எங்கள் வீட்டில், குழந்தைகளுக்கு உடம்பு சரியில்லையென்றால், காசிற்காக யாரையும் எதிர்பார்க்க வேண்டிய தேவை இனிமே இல்லை. எங்கள் அண்ணன் ஸ்டாலின் கொடுக்கும், தாய்வீட்டுச் சீர் மாதிரி 1000 ரூபாய் இருக்கிறது!” என்று மகிழ்ச்சியோட கூறுவதைப் பார்த்தேன். இப்படி மாதா மாதம், மாநிலம் முழுவதும் ஒரு கோடியே 15 இலட்சம் குடும்பங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்!

அடுத்து, “விடியல் பயணம்” திட்டம் பற்றிப் பேசுகிறார்கள்! ”ஸ்டாலின் சார் பஸ்ல போயி நான்கு மாதம் இலவசமாகப் பயணம் செய்து கம்ப்யூட்டர் கோர்ஸ் முடித்து, இப்போது வேலைக்குச் செல்கிறேன்” என்று சகோதரி ஒருவர் மகிழ்ச்சியுடன் கூறினார், இது போன்று, மாநிலம் முழுவதும் இதுவரைக்கும் மகளிர் மட்டும், 445 கோடி முறை பயணம் செய்து இருக்கிறார்கள்!

அடுத்து, மாணவி ஒருவர் பேசுகிறார்! ஏழ்மையான சூழலில் அரசுப் பள்ளியில் படித்துக் கல்லூரிக்கு வந்த எனக்கு, அப்பா மாதிரி, ஸ்டாலின் அய்யா 1000 ரூபாய் தருகிறார் என்று கூறினார்! இப்படி மாநிலம் முழுவதும் 4 இலட்சத்து 81 ஆயிரத்து 75 மாணவிகள் புதுமைப் பெண் திட்டம் மூலமாகப் பயனடைகிறார்கள்!

அடுத்த வீடியோவில், “எப்போதாவதுதான் வீட்டில் சாப்பிடுவேன்... காலையில் அம்மா வேலைக்குச் சென்று விடுவார்கள்... நான் பள்ளிக்கு வந்துவிடுவேன்... இப்போது பள்ளியிலேயே ஸ்டாலின் தாத்தாவின் காலை உணவுத் திட்டத்தில் சாப்பிடுகிறேன்” என்று, சிரித்துக்கொண்டே ஒரு குழந்தை பேட்டி கொடுத்தது! எனக்குப் புல்லரித்துப் போய்விட்டது. அது போன்று தமிழ்நாடு முழுவதும் 16 இலட்சம் குழந்தைகள் காலை உணவுத் திட்டத்தில் சாப்பிடுகிறார்கள்!

## அ.தி.மு.க. ஆட்சிதான் தமிழ்நாட்டின் இருண்ட காலம்!

அதுமட்டுமல்ல, உழவர்களுக்கு இலவச மின் இணைப்புகள்,

**மக்களைத் தேடி மருத்துவம்,**

**நான் முதல்வன் திட்டம்,**

**புதுமைப்பெண் திட்டம்,**

**தமிழ்ப்புதல்வன் திட்டம்,**

**இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48,**

## போலியான பிம்பங்களால் கட்டமைக்கப்பட்ட ‘மோடி மாடல்’ இன்றைக்கு அம்பலப்பட்டு நிற்கிறது!

இப்படி மூன்றே ஆண்டுகளில் தமிழ்நாட்டில் உள்ள எல்லா குடும்பத்திற்கும் பார்த்துப் பார்த்து அவர்கள் குடும்பத்தில் ஒருவனாகப் பல திட்டங்களைத் தீட்டி தருபவன்தான், இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்!

ஆனால், பத்தாண்டுகளாக இந்தியாவை ஆட்சி செய்த மோடியால் இப்படிப்பட்ட சாதனைகளைப் பட்டியலிட முடியுமா? தமிழ்நாட்டை ஆட்சி செய்த பாதம்தாங்கி பழனிசாமியால் தான் பட்டியலிட முடியுமா?

### நாடாளுமன்றத் தேர்தலில் நமது வாக்குறுதிகள்!

நம்முடைய திராவிட மாடல் அரசின் சாதனைகள் ஒன்றியத்திலும் தொடர வேண்டும் என்றுதான், சாதனைகளாக மாறப்போகும் வாக்குறுதிகளைத் தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கிறோம். அதில் சிலவற்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்...

பத்தாண்டுகளாக சாமானிய மக்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்கள் என்று சிறிதும் நினைத்துப் பார்க்காமல், மக்கள் விரோத பா.ஜ.க. அரசால் தொடர்ந்து உயர்த்தப்பட்ட பெட்ரோல், டீசல், கேஸ் விலை குறைக்கப்படும்!

**சிறுபான்மையின மக்களுக்கு எதிரான சட்டங்கள் ரத்து செய்யப்படும்!**

**தொழிலாளர் விரோதச் சட்டங்கள், மறுசீரமைப்பு செய்யப்படும்!**

**ஜி.எஸ்.டி. சட்டத்தில் சீர்திருத்தம் செய்யப்படும்!**

**விவசாயிகள் கூட்டுறவு அமைப்புகளிலும் வங்கிகளிலும் வாங்கியிருக்கும் கடனும் - வட்டியும் தள்ளுபடி செய்யப்படும்!**

**உழவர்களின் வேளாண் விளைபொருட்களுக்கு மொத்த உற்பத்திச் செலவுடன் ஐம்பது விழுக்காடு என்பதை வலியுறுத்திக் குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்யப்படும்!**

**தேசிய நெடுஞ்சாலைகளில் இருக்கும் சுங்கச் சாவடிகள் முற்றிலுமாக அகற்றப்படும்!**

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் வேலை நாட்கள் 100இல் இருந்து, 150 நாட்களாகவும் ஊதியம் 400 ரூபாயாகவும் உயர்த்தப்படும்!**

**மாணவர்களின் கல்விக் கடன் முற்றிலுமாகத் தள்ளுபடி செய்யப்படும்!**

**வங்கிகளில் மினிமம் பேலன்ஸ் இல்லாத போது விதிக்கப்படும் அபராதம் நீக்கப்படும்!**

**ஆலங்குப்பம் இரயில்வே சுரங்கப்பாதை மேம்பாலமாக மாற்றி அமைக்கப்படும்!**

**சேலம் விமான நிலையம் விரிவாக்கம் செய்யப்படும்! பன்னாட்டு விமான நிலையம் அமைக்கப் பரிசீலிக்கப்படும்!**

**சேலத்தில் 1000 ஏக்கர் பரப்பளவில் ஒரு புதிய தொழிற்பூங்கா அமைக்கப்படும்!**

**சேலம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு மையம் அமைக்கப்படும்!**

இது எல்லாவற்றிற்கும் மேல், முக்கியமாக, சாதிவாரிக் கணக்கெடுப்பும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் குறித்த கணக்கெடுப்பும், ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரே நேரத்தில் ஒன்றிய அரசால் எடுக்கப்படும்!

இதெல்லாம் நிறைவேற, சேலம் நாடாளுமன்றத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி வேட்பாளர் செல்வகணபதி அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று சேலம் தொகுதி மக்களையும் கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி வேட்பாளர் மலையரசன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று கள்ளக்குறிச்சி தொகுதி மக்களையும் கேட்டுக் கொள்கிறேன்!

### பா.ஜ.க. - அ.தி.மு.க.வை ஒருசேர வீழ்த்துவோம்!

தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க. - அவர்களோடு கூட்டணி வைத்திருக்கும் பா.ம.க. - தமிழ்நாட்டைப் பாழ்படுத்திய அ.தி.மு.க. இவர்கள் அனைவரையும் ஒருசேர வீழ்த்துங்கள்.

நீங்கள் அளிக்கும் வாக்கு இந்தியாவைக் காக்கட்டும்! தமிழ்நாட்டைக் காக்கட்டும்! உங்கள் எதிர்காலத் தலைமுறையைக் காக்கட்டும்!

பாசிசத்தை வீழ்த்த ஜனநாயகத்தைக் காக்க உங்கள் ஸ்டாலின் அழைக்கிறேன்!

நாற்பதும் நமதே! நாடும் நமதே! நாற்பதும் நமதே! நாடும் நமதே!

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், காஞ்சிபுரம் - விழுப்புரம் - கடலூர் - சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதிகளின் கழகக் கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்குகள் சேகரித்த காட்சிகள்!



கழக இளைஞரணிச் செயலாளரும் – இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை மற்றும் சிறப்புத்திட்ட செயலாக்கத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் ‘இந்தியா’ கூட்டணி சார்பில் காஞ்சிபுரம் மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் க.செல்வத்தை ஆதரித்து, மதுராந்தகம் நகரில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்கள்.



கழக இளைஞரணிச் செயலாளரும் – இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை மற்றும் சிறப்புத்திட்ட செயலாக்கத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் விழுப்புரம் மக்களவைத் தொகுதியில் ‘இந்தியா’ கூட்டணி சார்பில் பானை சின்னத்தில் போட்டியிடும் கழகக் கூட்டணி வேட்பாளர் ரவிக்குமாரை ஆதரித்து விழுப்புரம் நகரத்தில் பிரச்சாரம் மேற்கொண்டார்.



கழக இளைஞரணிச் செயலாளரும் – இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை மற்றும் சிறப்புத்திட்ட செயலாக்கத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் ‘இந்தியா’ கூட்டணி சார்பில் கடலூர் மக்களவைத் தொகுதியில் கை சின்னத்தில் போட்டியிடும் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் விஷ்ணு பிரசாத்தை ஆதரித்து விருதாச்சலம் பகுதியில் வாக்கு சேகரித்து பிரச்சாரம் மேற்கொண்டார்.



கழக இளைஞரணிச் செயலாளரும் – இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை மற்றும் சிறப்புத்திட்ட செயலாக்கத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் ‘இந்தியா’ கூட்டணி சார்பில் சிதம்பரம் மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவனை ஆதரித்து காட்டுமன்னார்கோவில் பகுதியில் பானை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

## ஈரோடு - நாமக்கல்லைச் சேர்ந்த பல்வேறு சங்கங்கள், முக்கிய அமைப்புகள், பிரமுகர்கள்

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினைச் சந்தித்து ஆதரவு தெரிவித்தனர்!













**ஈரோடு, ஏப்.1–**

**கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களைச் சேர்ந்த பல்வேறு சங்கங்கள் மற்றும் அமைப்புகளை சார்ந்தவர்கள் நேற்று (31.03.2024) சந்தித்து தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவித்தனர். அது விவரம்:–**

1.தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் எல்.கே.எம். சுரேஷ்

2. ஈரோடு ஆடை வணிகர்கள் சங்க தலைவர் சிதம்பரம் சரவணன்

3. அனைத்து ஜவுளி பதனிடும் தொழிற்சங்கம் தலைவர் முருகேசன்

4. கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கம் தலைவர் ராமசாமி

5.ஈரோடு மாவட்ட முஸ்லீம் ஜமாத் தலைவர் அபுபக்கர்

6.ஈரோடு மாவட்ட தொழிற் வணிக சங்க கூட்டமைப்பு தலைவர் ராஜமாணிக்கம்

7.ஒளிரும் ஈரோடு எடிசியா அமைப்பின் தலைவர் மூர்த்தி

8.ஈரோடு மாவட்ட வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மாவட்ட தலைவர் திரு. சண்முகம்

9.அண்ணா திராவிட மக்கள் முன்னேற்ற கழக மாநில பொது செயலாளர் பசும்பொன் பாண்டியன்

10. தமிழ்நாடு கோழி பண்ணை உரிமையாளர்கள் சங்கத் தலைவர்சிங்கராஜ்

11.தமிழ்நாடு கோழி பண்ணை வணிகர்கள் கூட்டமைப்பு தலைவர் சுப்ரமணி

12.தமிழ்நாடு முட்டை ஏற்றுமதியாளர்கள் சங்கத் தலைவர்பன்னீர்செல்வம்

13.நாமக்கல் மாவட்ட ஏற்றுமதியாளர்கள் சங்கத் தலைவர் பரந்தாமன்.

14.தென்னிந்திய விவசாய ரிக் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் பாரி கணேசன்

15. ஆம் ஆத்மி கட்சியின் ஈரோடு மாவட்ட தலைவர் திருமதி சுனிதா

16. திருச்செங்கோடு லாரி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் மூர்த்தி

17.ஈரோடு மாவட்ட குலாளர் மண்பாண்ட தொழிலாளர்கள் சங்கத் தலைவர் கனகராஜ்

இந்த நிகழ்வின்போது, அமைச்சர் முத்துசாமி, தி.மு.க. துணைப் பொது செயலாளர் அந்தியூர் செல்வராஜ், முன்னாள் ஒன்றிய அமைச்சரும், சட்டமன்ற உறுப்பினருமான ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் பொது செயலாளர் ஈஸ்வரன், நாமக்கல் மாவட்ட செயலாளர்கள் ராஜேஷ்குமார், மதுரா செந்தில், ஈரோடு மக்களவைத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் பிரகாஷ், நாமக்கல் தொகுதி தி.மு.க. கூட்டணி வேட்பாளர் கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் மாதேஸ்வரன் ஆகியோர் உடனிருந்தனர்.



திண்டுக்கல் நாடாளுமன்ற தொகுதியில் 'இந்தியா' கூட்டனியில் தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான கூட்டனி கட்சி சார்பாக போட்டியிடும் சி.பி.எம்.கட்சி வேட்பாளர் ஆர்.சச்சிதானந்தத்தைக ஆதரித்து ஆத்தூர் கிழக்கு ஒன்றியம், சின்னாளபட்டியில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தேர்தல் பிரச்சாரம் செய்து அரிவாள் சுத்தியல் நட்சத்திரம் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் வேட்பாளர் சச்சிதானந்தம், ஒன்றியச் செயலாளர் முருகேசன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



இராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதியின் 'இந்தியா' கூட்டணியின் வேட்பாளர் நவாஸ்கனியை ஆதரித்து திருச்சுழி தொகுதிக்குட்பட்ட பல்வேறு இடங்களில் விருதுநகர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான தங்கம் தென்னரசு தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.03.2024) ஈரோடு மாவட்டம் அவல்பூந்துறையில், மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் கணேச மூர்த்தியின் இல்லத்திற்கு நேரில் சென்று அவரது திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். அமைச்சர்கள் முத்துசாமி, வெள்ளகோவில் சாமிநாதன், திருமதி கயல்விழி செல்வராஜ், ஈரோடு மக்களவைத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் பிரகாஷ் ஆகியோர் உடனிருந்தனர்.



திருநெல்வேலி மக்களவைத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் ராபர்ட் புரூஸ்க்கு ஆதரவாக கை சின்னத்தில் வாக்கு கேட்டு நெல்லை மாவட்டம் இராதாபுரம் தொகுதி கூத்தங்குழி மீனவர்கள் வாழும் பகுதியில் மீன்வளம்மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் உரையாற்றினார். உடன் மாவட்ட அவைத் தலைவர் கிரகாம்பெல், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு, ஒன்றியச் செயலாளர்கள் ஜெகதீஸ், ஜோசப்பெல்சி, ஆரோக்கிய எட்வின் உள்பட பலர் உள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி தேர்தல் பிரச்சாரச் சுற்றுப் பயணம்!



**01.04.2024 ( திங்கட்கிழமை )**

**திருநெல்வேலி**

| நேரம் | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| மாலை 4.00 | இராதாபுரம் (திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்) | பெருந்தலைவர் காமராஜர் சிலை அருகில், வள்ளியூர் |

**கன்னியாகுமரி**

| நேரம் | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| மாலை 4.30 | கன்னியாகுமரி | குழித்துறை அண்ணா சிலை |
| மாலை 5.30 | | புதுக்கடை பேருந்து நிலையம் |
| மாலை 6.15 | | குளச்சல் பீச் முக்கு |
| மாலை 7.00 | | நாகர்கோவில் வடசேரி அண்ணா சிலை |
| மாலை 7.45 | | கொட்டாரம் ஜங்ஷன் |

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பீட்டர் அல்போன்ஸ் - விஜிலா சத்யானந்த் - டாக்டர் சுபேர்கான் தேர்தல் பிரச்சாரம்

2024 ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, பீட்டர் அல்போன்ஸ் - திருமதி விஜிலா சத்யானந்த் - டாக்டர் சுபேர்கான் ஆகியோர் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பின்வரும் நாடாளுமன்றத் தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார்கள். அதன் விவரம் பின்வருமாறு:

| தேதி | | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|---|
| 04.04.2024 | - | கன்னியாகுமரி |
| 05.04.2024 | - | தூத்துக்குடி |
| 06.04.2024 | - | இராமநாதபுரம் |
| 07.04.2024 | - | பெரம்பலூர் |
| 08.04.2024 | - | திண்டுக்கல் |
| 09.04.2024 | - | கோயம்புத்தூர் |
| 10.04.2024 | - | நீலகிரி |
| 11.04.2024 | - | வேலூர் |
| 12.04.2024 | - | திருபெரும்புதூர் |
| 13.04.2024 | - | சென்னை |

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் முனைவர் சபாபதிமோகன் தேர்தல் பிரச்சாரம்

### தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் முனைவர் சபாபதிமோகன் அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|---|
| 04.04.2024 | - | கோயம்புத்தூர் |
| 05.04.2024 | - | ஈரோடு |
| 06.04.2024 | - | சேலம் |
| 07.04.2024 | - | கள்ளக்குறிச்சி |
| 08.04.2024 | - | விழுப்புரம் |
| 09.04.2024 | - | பெரம்பலூர் |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 31.03.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.


# மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி

ஏப்ரல் 01 2024



துணிவுமிக்க உள்ளம்! பணிவுமிக்க பண்பாடு!
கொள்கையில் உறுதி! குறிகோளுக்காக
தியாகம் செய்யும் இயல்பு!!

தி.மு.க.மாநில தொண்டரணி செயலாளர்

தமிழ்ப்போராளி
**த.மாசிலாமணி** எம்.ஏ.,

தங்கள் நினைவுகளுடன்

மனைவி : **ரமா.மாசிலாமணி** மகன் : **மா.தமிழ்ச்செல்வன்** BE.,
மகள் : **மா.கண்மணி** BE., மருமகன் : **ச.இளவரசன்** BE.,
மற்றும் **கழகத்தோழர்கள்**


இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க.

## இளைஞரணி நிர்வாகிகள் கூட்டம்!

### மாவட்ட அமைப்பாளர் கே.சம்பத்ராஜா அறிவிப்பு!

இராமநாதபுரம், ஏப். 1 –

இராமநாதபுரம் மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள், தி.மு.க. இளைஞர் அணி நகர, ஒன்றிய, பேரூர் பொறுப்புகளுக்கு விருப்பமனு அளித்தவர்கள் மற்றும் இளைஞரணி பாக முகவர்கள் கூட்டம் இன்று (1.4.2024 – திங்கட்கிழமை) மதியம் 1.30 மணிக்கு இராமநாதபுரம், பாரதி நகர் பீமாஸ் வைஸ்ராய் ஹாலில் மாவட்டச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. தலைமையில் கழக இளைஞரணி துணைச் செயலாளர்கள் ஜி.பி.ராஜா, இன்பா ஏ.என்.ரகு மற்றும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.ரமேஸ் கண்ணா, சி.கே.குமரகுரு, சண் சம்பத் குமார், ஆர்.எஸ்.சத்தியேந்திரன், ஆர்.கே.கோபிநாத், எஸ்.தௌபீக் ரஹ்மான் முன்னிலையில் நடைபெறுகிறது.

ஆகவே இராமநாதபுரம் மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள், இளைஞர் அணி நகர, ஒன்றிய, பேரூர் பொறுப்புகளுக்கு விருப்பமனு அளித்தவர்கள் மற்றும் இளைஞரணி பாக முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு இளைஞரணி அமைப்பாளர் கே.சம்பத்ராஜா கேட்டுக் கொண்டுள்ளார்.

## புதுக்கோட்டையில் வாக்குச் சேகரிப்பு!

புதுக்கோட்டை. ஏப். 1 –

தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில், புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தில், ‘‘இந்தியா’’ கூட்டணியில் இடம்பெற்றுள்ள தோழமைக் கட்சி நிர்வாகிகள் முன்னிலையில், திருச்சி நாடாளுமன்றத் தொகுதி ம.தி.மு.க.வேட்பாளர், சகோதரர் துரை வைகோவிற்கு தேர்தல் ஆணையத்தால் ஒதுக்கப்பட்டுள்ள தீப்பெட்டி சின்னத்தை அறிமுகப்படுத்தும் எழுச்சிமிகு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்வுகளில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப் பித்தன், ஆ.செந்தில், ம.தி.மு.க. எஸ்.கே.கலியமூர்த்தி, கம்யூனிஸ்ட் கவிவர்மன், கம்யூனிஸ்ட் செங்கோடன், பி.ராஜேஸ்வரி, எம்.லியாகத் அலி, சு.சண்முகம். என்.சாத்தையா, இராசு.சந்தோஷ், மா.மணிவேல், கவிஞர் ஆ. மரிய எட்வின், கவிவேந்தன், கண்மணி சுப்பு, பழனிவேலு, புதுநகர் குமார், எம்.கே.அறிவுடை நம்பி, சி,மாரியப்பன், ஏ.எல்.கணேசன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சாத்தூர் பாலகிருஷ்ணன்
ஏப்ரல் 1 (1976)



சுயமரியாதை இயக்கச் சுடர் சாத்தூர் நகரக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.

துவக்க காலம் தொட்டு இயக்கம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

மிசா காலத்தில் சிறையில் அடைக்கப்பட்டு காவல் துறையினரின் அடக்குமுறைக்கு ஆளாகி உயிர் நீத்தவர்.

"சாத்தூர் பாலகிருஷ்ணன் – அய்யோ! எவ்வளவு உயரமான உருவம்! எத்துணை கம்பீரத் தோற்றம்! எவ்வளவு இனிய இயல்பு! அடக்கம்! அமைதி! அன்பின் பெருக்கு! எல்லாமே பொதிந்திருந்த ஆருயிர் உடன்பிறப்பு!" என தலைவர் கலைஞர் தம் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## ஒன்றியத்தில் ‘இந்தியா’ கூட்டணி ஆட்சி அமைந்ததும்

# அனைத்துப் பெண்களுக்கும் மகளிர் உரிமைத் தொகை!

## கோவில்பட்டி வாக்குச் சேகரிப்பில் கழக வேட்பாளர் கனிமொழி கருணாநிதி உறுதி!

கோவில்பட்டி, ஏப். 1 -

**ஒன்றியத்தில் ‘இந்தியா’ கூட்டணி ஆட்சி அமைந்ததும் அனைத்து பெண்களுக்கும் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படும் என கோவில்பட்டியில் நடைபெற்ற வாக்குச் சேகரிப்பின் போது கழக துணைப் பொதுச் செயலாளரும் - நாடாளுமன்ற கழக வேட்பாளருமான கனிமொழி கருணாநிதி வாக்குறுதியளித்தார்.**




தூத்துக்குடி மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் – கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

வர இருக்கும் 2024 மக்களவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான இந்தியா கூட்டணியின் சார்பில், தூத்துக்குடி மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் 30.3.2024 - சனிக்கிழமை அன்று, தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, நாலாட்டின்புதூர், முடுக்கு மீண்டான்பட்டி, தோனுகால், வானரமுட்டி, குமரெட்டியாபுரம், காலாம்பட்டி, கட்டாலங்குளம், காலாங்கரைப்பட்டி, கழுகுமலை, கே.துரைச்சாமிபுரம், கே.வெங்கடேஸ்வரபுரம், தெற்கு கழுகுமலை, கரடிகுளம், கே.சுப்பிரமணியபுரம், செட்டிகுறிச்சி, திருமங்கலகுறிச்சி, வெள்ளாளங்கோட்டை, சிதம்பரம்பட்டி, கயத்தாறு, சன்னதுபுதுக்குடி, ராஜாபுதுக்குடி, பன்னீர்குளம், தெற்கு மயிலோடை, அகிலாண்டபுரம், அய்யனார்ஊத்து, உசிலங்குளம், பனிக்கர்குளம், தெற்கு இலந்தைகுளம், வடக்கு இலந்தைகுளம், காப்புலிங்கம்பட்டி, சிவஞானபுரம், ஆசூர், கரிசல்குளம், கடம்பூர், திருமலாபுரம், கே.சிதம்பரா புரம், குருமலை, குப்புனாபுரம், வடக்கு வண்டானம், தெற்கு வண்டானம், காயநாயக்கன்பட்டி, கொப்பம்பட்டி, முடுக்கலா ன்குளம், குருவிநத்தம், தீத்தாம்பட்டி, தொட்டம் பட்டி, அச்சங்குளம் ஆகிய பகுதி மக்களைச் சந்தித்து வாக்கு சேகரித்தார்!

அப்போது கனிமொழி கருணாநிதி பேசும்போது,

“கடந்த சட்டமன்றத் தேர்தல் நேரத்தில் உங்களை சந்தித்த முதலமைச்சர் அண்ணன் தளபதி, தான் அளித்த வாக்குறுதிகள் எல்லாவற்றையும் நிறைவேற்றியிருக்கிறார். பெண்களுக்கு இலவச பஸ் பயணம் என்று தேர்தலில் வாக்குறுதியளித்தார். வெற்றி பெற்று ஆட்சி அமைத்ததும் முதல் கையெழுத்தே விடியல் இலவச பயணம்தான்.

**‘இந்தியா’ கூட்டணி ஆட்சியில் உரிய நிதி ஒதுக்கீடு கிடைக்கும்!**

அதேபோல மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் என்று வாக்குறுதி அளித்தார். இப்போது ஒரு கோடியே 16 லட்சம் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் உரிமைத் தொகை வழங்கி வருகிறார். இப்போது மோடி அரசு நமது தமிழ்நாட்டுக்கு உரிய நிதியை ஒதுக்காத காரணத்தால்தான் அனைத்து மகளிருக்கும் வழங்க முடியாத ஒரு நிலை இருக்கிறது. ஒன்றியத்தில் நம் ஆட்சி இந்தியா கூட்டணி ஆட்சி வந்தவுடனே... தமிழ்நாட்டுக்கு உரிய நிதி ஒதுக்கீடு கிடைக்கும். அதன் பின் மீதி இருக்கிற அத்தனை சகோதரிகளுக்கும் வரவேண்டிய மகளிர் உரிமைத் தொகை கண்டிப்பாக வந்து சேரும்.

இப்ப கேஸ் விலை என்ன? மோடி ஆட்சிக்கு வரும்போது 410 ரூபாய் இருந்தது. இப்போது 1200 ஆக உயர்ந்தது. மகளிர் தினம் மார்ச் 8ல் மோடி நூறு ரூபாயை குறைத்தார். மகளிர் தினம்னா கேஸ் சிலிண்டர் விலை குறைக்கிறதுதானா? மகளிர்னா சமைக்குறதுக்குத்தான்னு மோடி முடிவு பண்ணிட்டார்.

ஆனால் நமது முதலமைச்சர் வாக்குறுதி அளித்திருக்கிறார். இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்ததும் கேஸ் விலையை 500 ஆக குறைப்போம் என்று வாக்குறுதியளித்துள்ளார். ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். ஐந்து விரல்களை விரித்தால் அதுதான் உதயசூரியன். உதயசூரியனுக்கு வாக்களியுங்கள், கேஸ் சிலிண்டர் விலை 500 ஆக குறையும்.

இந்தத் தேர்தல் ஒன்றியத்தில் இருக்கும் ஆட்சியை அகற்றும் தேர்தல். உங்கள் அக்கவுண்டில் 15 லட்சம் போடுவதாக சொல்லி ஆட்சிக்கு வந்தார் மோடி. ஆனால் நம் அக்கவுண்டில் இருக்கிற காசையும் மினிமம் பேலன்ஸ் இல்லை என சொல்லி அதையும் பிடுங்கிக் கொள்கிறார்.

**100 நாள் வேலை சம்பளம் ரூ.400!**

100 நாள் வேலை யாருக்குமே இல்லை. மாசக் கணக்கில் 100 நாள் வேலைக்கான சம்பளம் வரவில்லை. ஏனென்றால் மோடி ஆட்சியில் 100 நாள் வேலையை முடக்குவதற்காக நிதி ஒதுக்குவதே இல்லை. நம் இந்தியா கூட்டணி ஆட்சி மீண்டும் ஒன்றியத்தில் வந்ததும் 100 நாள் வேலையை 150 நாளாக ஆக்குவோம் என்றும் சம்பளம் 400 ரூபாய் என்றும் அறிவித்துள்ளார் முதல்வர் தளபதி. காங்கிரஸும் 400 ரூபாய் சம்பளம் என்று அறிவித்துள்ளது.

மக்களுக்கு விவசாயக் கடனை தள்ளுபடி செய்யுங்கள் என்றால் மோடி செய்ய மாட்டார். மாணவர்களுக்கு கல்விக் கடனை தள்ளுபடி செய்யுங்கள் என்றால் செய்யமாட்டார். ஆனால் அதானி, அம்பானி போன்ற தொழிலதிபர்களுக்கு 68 ஆயிரம் கோடி ரூபாய் கடனை தள்ளுபடி செய்திருக்கிறார் மோடி.

**எதிர்காலம் பாதுகாப்பாக இருக்க பா.ஜ.க. ஆட்சி வரக்கூடாது!**

இந்த பா.ஜ.க. ஆட்சியில் பா.ஜ.க. எம்பிக்கள் 44 பேர் மீது பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான வழக்கு இருக்கிறது. பிறகு எப்படி பெண்களுக்கு இந்த பாஜக ஆட்சியில் பாதுகாப்பு இருக்கும்? இதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்தத் தேர்தல் வெறும் ஆட்சிப் பொறுப்புக்கான தேர்தல் மட்டுமல்ல... நம் பிள்ளைகள், நம் பெண்கள், நம் குழந்தைகளின் எதிர்காலம் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றால் மீண்டும் பாஜக ஆட்சி வரக்கூடாது.

நம் வீட்டுப் பிள்ளைகளுக்காக தலைவர் கலைஞர் கொண்டுவந்த அரசு மருத்துவக் கல்லூரிகளில் நீட் தேர்வு காரணமாக நம் பிள்ளைகள் படிக்க முடியவில்லை. புதிய கல்விக் கொள்கையின் மூலம் கலை, அறிவியல் கல்லூரிகளில் சேர்வதற்கு கூட நுழைவுத் தேர்வை கொண்டு வருகிறார்கள். இதெல்லாம் சாதாரண சாமானிய வீட்டுப் பிள்ளைகள் படிக்க கூடாது என்பதற்காகவே. இரு நூறு வருடம் முன்பு இருந்த நிலையை உருவாக்கப் பார்ப்பதுதான் மோடி ஆட்சி.

கடலை மிட்டாய் தொழிலை மேம்படுத்த கடலை மிட்டாய்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும் என்பதற்காக கோவில்பட்டியில் கடலைமிட்டாய் மேம்பாட்டு வளாகத்தை அமைப்போம் என்று முதலமைச்சர் சொல்லியிருக்கிறார். மிகப்பெரிய கார் தொழிற்சாலை தூத்துக்குடிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

**தூத்துக்குடி எனது இரண்டாவது தாய்வீடு!**

உங்களோடு நின்று பணியாற்றும் வாய்ப்பை எனக்கு மீண்டும் அளிக்க வேண்டும். போன தேர்தலில் நான் வேட்பாளராக நிறுத்த ப்பட்டபோது, ‘கனிமொழி சென்னையில் இருக்கிறவங்க. இங்க வரமாட்டாங்க’னு சிலர் சொன்னார். ஆனால் தூத்துக்குடி எனது இரண்டாவது தாய் வீடு என்று சொல்லும் அளவுக்கு இங்கேயே நான் இருக்கிறேன். முதலமைச் சரால் முன்னிறுத்தப்பட்டுள்ள எனக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்குமாறு வேண்டிக் கொள்கிறேன்”.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி உரையாற்றினார்.

மேலும் கோவில்பட்டி பகுதிக்கு தன்னுடைய எம்.பி. நிதியில் இருந்து செய்யப்பட்டிருக்கும் குடிநீர் திட்டப் பணிகள், சாலைப் பணிகள், நியாய விலைக் கடைகள், ஹைமாக்ஸ் விளக்குப் பணிகள் என்பவற்றைப் பட்டியலிட்டார் கனிமொழி.

உடன், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும் தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளருமான கீதா ஜீவன், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, நகர் மன்றத் தலைவர் கருணாநிதி மற்றும் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்!



சிவகங்கை சட்டமன்றத் தொகுதி காளையார் கோவிலில் நடைபெற்ற ‘இந்தியா’ கூட்டணி கட்சி செயல்விரர்கள் கூட்டத்தில் அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பேசுகிறார். உடன் ப.சிதம்பரம் எம்.பி. முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், வேட்பாளர் கார்த்தி ப.சிதம்பரம் சிவகங்கை சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் முருகவேல் எம்.எல்.ஏ.க்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார் எஸ்.மாங்குடி, முன்னாள் எம்.எல்.ஏ.வி.ராஜசேகரன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் த.சேங்கைமாறன், கே.எஸ்.எம். மணிமுத்து, ஒன்றியச் செயலாளர்கள் யோக.கிருஸ்ணகுமார், ஆர்.எம்.கென்னடி, வே.ஆரோக்கியசாமி ஆகியோர் உள்ளனர்.



தென்காசி மக்களவைத் தொகு கழக வேட்பாளர் மருத்துவர்.ராணி ஸ்ரீகுமார் சங்கரன்கோவில் வடக்கு ஒன்றியத் ற்கு உட்பட்ட குவளைக்கண்ணியில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ.தலைமையில் தீவிர வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபட்டார். தொடர்ந்து அங்கு தெரு தெருவாக சென்று வாக்காளர்களை சந் த்து உதய சூரியன் சின்னத் ல் வாக்களிக்கும் படி கேட்டுக் கொண்டார்.நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கர பாண்டியன், வெள்ளத்துரை, குவளைக்கண்ணி ஊராட்சி மன்ற தலைவர் னேஷ்,பொதுக்குழு உறுப்பினர் தேவதாஸ்,முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் ராசா என்ற ராசையா, மமாரிமுத்து,உள்பட ஒன்றிய,கிளை,கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் ரளாக கலந்து கொண்டனர்.

## குன்றத்தூரில் தேர்தல் பணிமனை திறப்பு!

காஞ்சிபுரம், ஏப். 1 –

இந்தியா கூட்டணிக் கட்சிகளின் வெற்றி வேட்பாளர் டி.ஆர். பாலு அவர்கள் போட்டியிடும் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதிட்பட்ட குன்றத்தூர் நகரத் தேர்தல் அலுவலகம் திறப்பு நிகழ்ச்சி, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் மற்றும் குன்றத்தூர் நகர தி.மு.க. சார்பில், அமைச்சரும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளருமான தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது.

இதில் நகரச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி, கழக முன்னோடிகள் டி.கே.குமாரசாமி, டி.எஸ்.கலைச்செலவன், துணைத் தலைவர் டி. திருநாவுக்கரசு, நகரத் துணைச் செயலாளர்கள் ஆர்.கே.அபிபுன்னிசா, த.கந்தசாமி, என்.கருணாநிதி, மாவட்டப் பிரதிநிதிகள் என். குணசேகரன், க.வே.சிதம்பரம், ஜெ.மணிமாறன், குன்றத்தூர் நகர ஒன்றிய நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், வார்டு கழகச் செயலாளர்கள், குன்றத்தூர் நகர அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வார்டு கழகச் செயலாளர்கள், மற்றும் தோழமைக் கட்சிகளின் மாவட்டத் தலைவர்கள், செயலாளர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### த. மாசிலாமணி

ஏப்ரல் 1 (2021)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் பேச்சுகளால் ஈர்க்கப்பட்டு, இளமைப் பருவம் முதலே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

தலைமைக் கழகப் பேச்சாளராகவும், மாநில தொண்டர் அணிச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இவர் படித்தபோது, விபரீதமான – விரும்பத்தகாத – வேண்டாத ஒரு நிலைமை உருவாக்கப்பட்டு, அதன் விளைவாக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

1982ல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், இவரது மணவிழாவினை நடத்தி வைத்தபோது "புரட்சிக் கவிஞர் வரிகளுக்கேற்ப சிறுத்தைக் கூட்டத்தில் உள்ள ஒரு சிறுத்தைதான் தம்பி மாசிலாமணி" என்று பாராட்டினார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



விருதுநகர் நாடாளுமன்ற தி.மு.க. கூட்டணி காங்கிரஸ் வேட்பாளர் மாணிக்கத்தாகூரை ஆதரித்து விருதுநகரில் தேர்தல் அலுவலகத்தை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் திறந்து வைத்தார். உடன் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், சேர்மன் சுப்புராஜ், காங்கிரஸ் தலைவர் ராஜா சொக்கர், நகரச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், இளைஞர் அணி கே.ஜி.ராஜகுரு, இளைஞர் அணி கிருஷ்ணகுமார், இலக்கிய அணி மலைராஜன், பொதுக்குழு உறுப்பினர்கள் மதியழகன், சுதாகர், தெற்கு மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.வி.துரை, ராஜசெல்வம், ஏ.எஸ்.கே.ரமேஷ்குமார், மரியராசு, எல்.திருமாறன், காசிராஜன், புலி நாயக்கர், காங்கிரஸ் மீனாட்சி சுந்தரம், வெயில் முத்து, தி.க.ஆதவன், விடுதலைச் சிறுத்தைகள் சக்திவேல், கம்யூனிஸ்ட் கட்சி முருகன், வெங்கட ராமன் மற்றும் கூட்டணி கட்சியைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.



மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் விருதுநகர் நாடாளுமன்றத்துக்குட்பட்ட திருப்பரங்குன்றம் தொகுதியில் 'இந்தியா' கூட்டணி காங்கிரஸ் வேட்பாளர் மாணிக்கம் தாகூர் அறிமுகம், செயல்வீரர்கள் கூட்டம் மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் தலைமையில் நடைபெற்றது. இதில் நாடாளுமன்ற தொகுதி பொறுப்பாளர், மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் என பல்லாயிரக் கணக்கானோர் பங்கேற்றார்கள்.

### விழுப்புரம் வடக்கு மாவட்டம் - மரக்காணம் பேரூராட்சிக்கு உட்பட்ட

# 18 வார்டுகளில் கூட்டணி வேட்பாளர் துரை ரவிக்குமாருக்கு வாக்குச் சேகரிப்பு!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் தீவிர பிரச்சாரம்!

*மரக்காணம், ஏப். 1 - விழுப்புரம் வடக்கு மாவட்டம் மரக்காணம் பேரூராட்சியில் இந்தியா கூட்டணி கட்சி சார்பில் போட்டியிடும் விழுப்புரம் நாடாளுமன்ற விடுதலை சிறுத்தை கட்சி வேட்பாளர் துரை ரவிக்குமாரை ஆதரித்து சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் பானை சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார்.*

*மரக்காணம் பேரூராட்சி உள்ள அழகன்குப்பம், தாழங்காடு, முட்டு க்காடு, பசவன் குப்பம், கழிப்பாறை குப்பம், மண்டபாய்ப்பட்டு, கரிப்பாளையம், மரக்காணம் பேருந்து நிலையம்ஆகிய பகுதிகளில் பானை சின்னத்தில் போட்டியிடும்கூட்டணி கட்சி வி.சி.க. வேட்பாளர் துரை ரவிக்குமாரை ஆதரித்து அமைச்சர் செஞ்சி மஸ்தான் தீவிர வாக்கு சேகரித்தார்.*

*அப்போது மரக்காணம் பேருந்து நிலையம் அருகில் உள்ள டீக்கடையில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் டீ போட்டு பொதுமக்களுக்கு கொடுத்து நூதன முறையில் பானை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.*

*தொடர்ந்து அப்பகுதியில் உள்ள கடைகளுக்குச் சென்று முதலமைச்சரின் சாதனைகளை எடுத்துரைத்து பானை சின்னத் திற்கு வாக்கு சேகரித்த அமைச்சர் செஞ்சி மஸ்தான் மத்தியில் ஆளும் பாசிச பி.ஜே.பி. ஆட்சியை அகற்றி ஜனநாயக ஆட்சிகொண்டு வருவதற்கு வாக்காளர்கள் அனைவரும் சபதம் ஏற்க வேண்டும் என்றும் தமிழ்நாடு புதுவை உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் முதலமைச்சர் தலைமையிலான கூட்டணி கட்சியினர் வெற்றி பெறுவ தற்கும் முதலமைச்சர் யாரை கை காட்டுகிறாரோ அவரை இந்திய பிரதமர் ஆக்கிட தோழமைக் கட்சிகள் தீவிரமாக பணியாற்றிட வேண்டுமென வேண்டுகோள் விடுத்த அமைச்சர் செஞ்சி மஸ்தான் விழுப் புரம் நாடாளுமன்றத் தொகுதியில் கூட்டணி கட்சி வேட்பாளர் துரை ரவிக்குமாரை வெற்றி பெற செய்ய வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார்.*

*இதில் மாவட்ட பொருளாளர் ரமணன், மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், துணை சேர்மன் பழனி, மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் மலைச்சாமி, தி.மு.க. நிர்வாகிகள் இளைஞரணி கார்த்திகேயன், மாணவரணி முத்துவேல், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் பலராமன், கவுன்சிலர்கள் பிரபாகரன், கணபதி, வேலு, மாவட்ட ஆதிதிராவிடர் துணைத் தலைவர் அர்ஜுனன், வார்டு செயலாளர்கள் கோபாலகிருஷ்ணன், உதயகுமார், மூர்த்தி, சதாசிவம், மாவட்ட பிரதிநிதி முகமது அலி உள்ளிட்ட தோழமைக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு பானை சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தனர்.*

---

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, தேர்தல் பிரச்சாரம்!

(திருத்தப்பட்டது)

## தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்-19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, அவர்கள் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|
| 01.04.2024 (திங்கட் கிழமை) | கன்னியாகுமரி<br>திருநெல்வேலி |
| 02.04.2024 (செவ்வாய் கிழமை) | திருநெல்வேலி<br>தென்காசி |
| 04.04.2024(வியாழக் கிழமை) | மதுரை<br>தேனி |
| 08.04.2024 (திங்கட் கிழமை) | சென்னை தெற்கு |

**"அண்ணா அறிவாலயம்"**
*சென்னை-18.*
*29.03.2024*

**தலைமைக் கழகம்,**
*தி.மு.க.*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.எம். கண்ணபிரான்

### ஏப்ரல் 1 (1975)



பள்ளிப்படிப்பின்போதே தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவர். திராவிடர் கழகத்தில் வண்ணைப் பகுதியில் முக்கிய செயல்வீரராக செயல்பட்டவர்.

தி.மு.க. துவங்கியதும் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். என்.வி. நடராசன் அவர்கள் மாவட்டச் செயலாளராகப் பொறுப்பு வகித்தபோது இவர் மாவட்டத் துணைச் செயலாளராக பணியாற்றியவர். பின்னர், சென்னை மாவட்டக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்றார்.

கழகத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ள மிகப் பெரிய போராட்டமான மும்முனைப் போராட்ட காலத்தில் தலைநகர் சென்னையின் மாவட்டச் செயலாளராக இவர் ஆற்றிய பணிகள் மும்முனைப் போராட்டத்தைப் போலவே முக்காலமும் மறையாத அற்புதத் தொண்டாகும்.

தந்தை பெரியார் அவர்களிடமும், பேரறிஞர் அண்ணா அவர்களிடமும் தொடர்ந்து தலைவர் கலைஞர் அவர்களிடமும் அன்பு கொண்டவர்.

"கழகம்! கழகம்!! அது ஒன்றே அவரது உயிர் மூச்சோடு சேர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தது" என தலைவர் கலைஞர் அவர்கள் உடன்பிறப்பு கடிதத்தில் பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. தேர்தல் பிரச்சார சுற்றுப் பயணம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்- 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, எம்.எல்.ஏ., அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பின்வரும் நாடாளுமன்றத் தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு:

| தேதி | | பிரச்சாரம் செய்யும் ஊர் |
|---|---|---|
| 03-04-2024 | - | மயிலாடுதுறை |
| 04-04-2024 | - | இராமநாதபுரம் |
| 06-04-2024 | - | நாகப்பட்டினம் |
| 07-04-2024 | - | கரூர் |
| 08-04-2024 | - | திருச்சி |
| 09-04-2024 | - | பெரம்பலூர் |
| 10-04-2024 | - | திருவள்ளூர் |
| 12-04-2024 | - | வேலூர் |
| 13-04-2024 | - | திண்டுக்கல் |
| 14-04-2024 | - | சிதம்பரம் |
| 15-04-2024 | - | திருப்பூர் |
| 16-04-2024 | - | மத்திய சென்னை |
| 17-04-2024 | - | திருப்பெரும்புதூர் |

---

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கழக செய்தித் தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா தேர்தல் பிரச்சாரம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!



2024 ஏப்ரல் - 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி,

கழக செய்தித் தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|
| 06-04-2024 | கடலூர் |
| 07-04-2024 | விழுப்புரம் |
| 08-04-2024 | திருவண்ணாமலை |
| 09-04-2024 | ஆரணி |
| 10-04-2024 | வேலூர் |
| 11-04-2024 | அரக்கோணம் |
| 12-04-2024 | காஞ்சிபுரம் |
| 13-04-2024 | திருபெரும்புதூர் |
| 14-04-2024 | கிருஷ்ணகிரி |
| 15-04-2024 | தருமபுரி |
| 16-04-2024 | சேலம் |
| 17-04-2024 | கள்ளக்குறிச்சி |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள் - 31.03.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



தேனி நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளர் தங்கத் தமிழ்ச்செல்வன் போடி தொகுதி பூதிபுரம் பேரூராட்சி பகுதிகளில் வீடுவீடாக நடந்து சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார். உடன் மேற்கு ஒன்றியச் செயலாளர் அய்யப்பன், பேரூர்ச் செயலாளர் – பேரூராட்சித் தலைவர் கவியரசு மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கழகச் சொற்பொழிவாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி தேர்தல் பிரச்சாரம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!



2024 ஏப்ரல் - 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, கழக சொற்பொழிவாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார்.

அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|
| 06-04-2024 | திருவண்ணாமலை |
| 07-04-2024 | கிருஷ்ணகிரி |
| 08-04-2024 | தருமபுரி |
| 09-04-2024 | அரக்கோணம் |
| 10-04-2024 | காஞ்சிபுரம் |
| 11-04-2024 | திருபெரும்புதூர் |
| 12-04-2024 | திருவள்ளூர் |
| 13-04-2024 | வடசென்னை |
| 14-04-2024 | மத்திய சென்னை |
| 15-04-2024 | தென்சென்னை |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 31.03.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

---

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து ஊடகவியலாளர் செந்தில்வேல் தேர்தல் பிரச்சாரம்

## தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, ஊடகவியலாளர் செந்தில்வேல் அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார்.

அதன் விவரம் பின்வருமாறு : -

| தேதி | | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|---|
| 06.04.2024 | - | கோயம்புத்தூர் |
| 07.04.2024 | - | திருப்பூர் |
| 08.04.2024 | - | பொள்ளாச்சி |
| 09.04.2024 | - | நீலகிரி |
| 10.04.2024 | - | ஈரோடு |
| 11.04.2024 | - | கரூர் |
| 12.04.2024 | - | திருச்சி |
| 13.04.2024 | - | பெரம்பலூர் |
| 14.04.2024 | - | மயிலாடுதுறை |
| 15.04.2024 | - | தஞ்சாவூர் |
| 16.04.2024 | - | நாகப்பட்டினம் |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள் - 31.03.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

# சேலம் - பெத்தநாயக்கன் பாளையத்தில் சேலம் - கள்ளக்குறிச்சி தொகுதிகளின் கழக வேட்பாளர்களுக்கு வாக்குகள் கேட்டு கழகத் தலைவர் உரையாற்றிய மாபெரும் பொதுக் கூட்டக் காட்சிகள்!



















# அறுசுவை ஆரோக்கியம்!

## திராவிட மாடல் அரசு

### 62

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

‘உணவே மருந்து’ என்பது நம் பழந்தமிழர் பண்பாடு. ஆனால், அதனை அப்படியே மேலோட்டமாகப் பொருள் புரிந்துகொள்ளக் கூடாது. ஆரோக்கியமான உணவு வகைகளை உண்டு வந்தால், பல நோய்களை வரும் முன் தடுக்கலாம். எனவே, உணவு உட்கொள்வதில் கவனம் தேவை என்பதைச் சொல்லவே அந்தச் சொலவடை அந்தக் காலங்களில் பயன்படுத்தப்பட்டது.

அன்று பெரும்பாலான மக்கள் விவசாயத்தைச் சார்ந்து இருந்தனர். விவசாயத்தில் நவீன முறைகள் அறிமுகமாகியிராத அந்தக் காலகட்டத்தில் ஒவ்வொருவரும் தங்களுக்குத் தேவையான உணவை தாங்களே விளைவித்துக் கொண்டனர். அதற்கான கட்டாயம் அப்போது இருந்தது. எனவே, அவர்களின் உணவில் சிறுதானியங்களும், பாரம்பரிய அரிசி வகைகளும் அதிக அளவில் இடம்பிடித்திருந்தன. அவற்றை சாகுபடி செய்ய அதிக அளவில் தண்ணீரோ உழைப்போ தேவையில்லாமல் இருந்தது. இதனால், அவர்கள் ஓரளவு ஆரோக்கியமாகவே இருந்தனர்.

காலம் மாறி, மக்கள்தொகை பெருக, உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டு, நவீன முறை விவசாயத்தை மேற்கொண்ட பிறகு, எல்லோரும் தங்களுக்கான உணவைத் தாங்களே உற்பத்தி செய்துகொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லாமல் போனது. அதனால், சிறுதானியங்களுக்கான தேவை குறைந்தது. ஒரு கட்டத்தில், நவீன ரக அரிசி, கோதுமை போன்றவற்றை அளவுக்கு மீறி உட்கொள்ளும் பழக்கத்தால் மக்களுக்கு நீரிழிவு உள்ளிட்ட தொற்றா நோய்கள் அதிகரிக்கத் தொடங்கின.

இந்த நிலையில், கடந்த 20 ஆண்டுகளில் பாரம்பரிய நெல், சிறுதானியங்கள் ஆகியவற்றை ஆய்வுக்கு உட்படுத்தி, அவற்றை முறையாக உட்கொண்டால் நீரிழிவு உள்ளிட்ட நோய்களைத் தடுக்கலாம், குறைக்கலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஊட்டச்சத்துகளும் அதிகமாக உள்ளன என்பதால், மீண்டும் அவற்றின் மீது கவனம் குவியத் தொடங்கியது. அந்த கவனக் குவிப்புக் காரணமாக, 2022-ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் மன்றம், 2023, 2024 ஆம் ஆண்டை, **‘சர்வதேச சிறுதானிய ஆண்டு’** என்று அறிவித்தது.

அந்த அறிவிப்பைத் தொடர்ந்து, இந்தியாவிலும் பல்வேறு அரசு, தனியார் அமைப்புகள் சிறுதானியங்கள் குறித்து, விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன. நம் கழகத் தலைவர் முதலமைச்சர் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’ அமைந்த பிறகு, சிறுதானிய பயன்பாட்டை மக்களிடையே ஊக்குவிக்கும் விதமாக, 2022-ஆம் ஆண்டில், ரேஷன் கடைகள் மூலம் கேழ்வரகு விநியோகம் செய்யப்படும் என்று அறிவித்தது. தொடர்ந்து, 2023-ஆம் ஆண்டில் 1.85 கோடி ரூபாயில் மகளிர் குழுக்கள் **‘சிறுதானிய உணவகங்கள்’** திறக்கப்படும் என்று அறிவித்தது. அதன்படி, சென்னை நீங்கலாக 37 மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் **‘மதி சிறுதானிய உணவகம்’** என்ற பெயரில் உணவகங்கள் திறக்கப்பட்டு வருகின்றன.

### பயிற்சி பெற்ற மகளிர்

தற்சமயம் 20 மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள இந்த உணவகங்கள், தலா ரூ.5 லட்சம் மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ளன. அந்தந்தப் பகுதியில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த ஆர்வம் உள்ள உறுப்பினர்கள் ஐந்து பேர் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு திருச்சியில் உள்ள மாநில உணவகக் கல்லூரியில் சிறுதானிய உணவு தயார் செய்வது குறித்தும், சிறுதானியங்களைக் கொண்டு மதிப்புக்கூட்டுப் பொருட்களைச் செய்வது குறித்தும் நான்கு கட்டங்களாக மூன்று நாட்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

தமிழ்நாட்டு அரசிடம் சிறுதானியங்கள் விளைவிக்கப்படும் தொகுப்புகள் இருக்கின்றன. அங்கிருந்து இந்த உணவகங்களுக்கான சிறுதானியங்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன. இந்த உணவகங்களில் சிறுதானிய உணவு வகைகள் மட்டுமல்லாது, சிறுதானியங்களும் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும் அங்கே சிறுதானிய உணவு வகைகள் சமைப்பது குறித்த செய்முறைக் கையேடுகளும் வைக்கப்பட்டுள்ளன. எனவே, இந்த உணவகங்களில் உணவைச் சுவைத்து, அவற்றைத் தங்கள் இல்லங்களிலும் செய்து பார்க்க விரும்புபவர்கள் சிறுதானியங்களையும், செய்முறைக் கையேடுகளையும் வாங்கிச் செல்லலாம்.

### குறைந்த விலையில் தரமான உணவு

இதுநாள் வரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களுக்கு வரும் மக்கள், தனியார் நடத்தி வருகின்ற உணவகங்களில் தரம், விலை குறித்த அச்சத்துடன் சாப்பிட வேண்டி இருந்தது. இப்போது அந்தக் கவலை இல்லை. குறைந்த விலையில் தரமான, சுவையான உணவு வகைகள் இந்தச் சிறுதானிய உணவகங்களில் கிடைக்கின்றன. குறைந்தபட்சம் ரூ.5 முதல் அதிகபட்சம் ரூ.50 வரையில் இங்கே உணவு வகைகள் கிடைக்கின்றன.

காலை, மதியம், மாலை என மூன்று வேளையும் இங்கே உணவு கிடைக்கிறது. காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை இந்த உணவகங்கள் இயங்குகின்றன. சிறுதானியங்களைப் பொறுத்த அளவில் குறைந்த அளவே சாப்பிட்டாலும், வயிறு நிறைகிற உணர்வு கிடைப்பதால், இந்த உணவகங்களில் ஆட்சியர் அலுவலகங்களில் பணியாற்றுவோர், அங்கு பணி நிமித்தமாக வரும் பொதுமக்கள் மட்டுமல்லாது, அந்த அலுவலகத்துக்கு அருகில் உள்ள நிறுவனங்களில் பணிபுரிபவர்களும், இந்த உணவகங்களைத் தேடி வந்து சாப்பிட்டுச் செல்கிறார்கள்.

**இதுநாள் வரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களுக்கு வரும் மக்கள், தனியார் நடத்தி வருகின்ற உணவகங்களில் தரம், விலை குறித்த அச்சத்துடன் சாப்பிட வேண்டி இருந்தது. இப்போது அந்தக் கவலை இல்லை.**

ஒவ்வொரு உணவகத்திலும் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த, பயிற்சி பெற்ற ஐந்து உறுப்பினர்கள் பணியாற்றுகின்றனர். இந்த உணவகங்கள் மூலம் கிடைக்கும் வருமானம் முழுமையும் அந்தக் குறிப்பிட்ட குழுக்களுக்கே சென்று சேர்கிறது. குறிப்பிட்ட கால இடைவெளியில், சுழற்சி முறையில் வேறு வேறு குழுக்களைச் சார்ந்த பயிற்சி பெற்ற மகளிர் இந்த உணவகங்களில் பணியாற்றுகின்றனர். இவ்வாறு சுய உதவிக் குழுவில் உள்ளவர்களின் பொருளாதார நிலையும் மேம்படுகிறது. இப்படி சிறுதானியங்களால் சமூகமும் பயனடைந்து, சுய உதவிக் குழுக்களும் பயனடைவதால் ‘திராவிட மாடல் அரசு’ நம் வயிற்றை மட்டுமல்லாது மனங்களையும் நிறைக்கிறது..!

**...சாதனை தொடரும்**

### மதி சிறுதானிய உணவுப் பட்டியல்

**காலைச் சிற்றுண்டி**

தினை அரிசி இட்லி, கருப்பு உளுந்து இட்லி, ராகி அரிசி இட்லி, சாமை மிளகு இட்லி, தினை அரிசி பொங்கல், வரகு அரிசி பொங்கல், குதிரைவாலி பொங்கல், சாமை மிளகு பொங்கல், தினை அரிசி உப்புமா, குதிரைவாலி கிச்சடி, சாமை கிச்சடி, சம்பா கோதுமை ரவை கிச்சடி, ராகி பூரி, ராகி அடை, கம்பு தோசை, கேழ்வரகு தோசை, ராகி சேமியா புட்டு.







**மதியம்**

குதிரைவாலி சாம்பார் சாதம், குதிரைவாலி தயிர் சாதம், சாமை சாம்பார் சாதம், சாமை தயிர் சாதம், தினை அரிசி சாம்பார் சாதம், தினை அரிசி தயிர் சாதம், வரகு அரிசி சாம்பார் சாதம், வரகு அரிசி தயிர் சாதம், வரகு தேங்காய் சாதம், குதிரைவாலி வெஜ் பிரியாணி, சாமை வெஜ் பிரியாணி, தினை அரிசி வெஜ் பிரியாணி, சீரகசம்பா வெஜ் பிரியாணி, பருப்பு ஆம்லெட், கம்பங்களி, கம்பங்கூழ்.

**மாலைச் சிற்றுண்டி**

கேழ்வரகு சிமிலி, கேழ்வரகு தினைப் புட்டு, கேழ்வரகு பக்கோடா, கேழ்வரகு தினை முறுக்கு, கம்பு உருண்டை, வரகு போண்டா, தினை லட்டு, சிறுதானிய கொழுக்கட்டை, சிறுதானிய பஜ்ஜி, கருப்புகவுனிப் பாயசம், அவல் தினை, பாசிப்பருப்பு தினை, கருப்பு உளுந்து வடை, கொள்ளு வடை, கொண்டக்கடலை வடை, தினை இனிப்புக் குழிப்பணியாரம், தினை காரக் குழிப்பணியாரம், சுண்டல் வகைகள், சூப் வகைகள், தேநீர்.

இவற்றில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகை உணவு வகைகள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

### ஜெர்மானியர் பார்வையில் தமிழ்நாடு!



ஜெர்மானியர் ஒருவர் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக ஆசிய நாடுகளுக்கு சைக்கிள் பயணம் மேற்கொண்டிருக்கிறார். ஈரான், இராக், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், வங்கதேசம், சீனா, தாய்லாந்து, ஜப்பான், இலங்கை ஆகிய நாடுகளுக்குச் சென்ற அவர் தற்போது இந்தியாவுக்கும் வந்திருக்கிறார். பல்லடத்தில் உணவகம் ஒன்றுக்கு சாப்பிட வந்த அவரிடம், உணவக உரிமையாளர் விஜயன் சின்னச்சாமி நடத்திய உரையாடலைத் தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டிருக்கிறார்.

உணவக உரிமையாளர்: பயணத்தில் உங்களுக்குப் பிடித்த நாடு எது?

ஜெர்மானியர்: சீனா, இலங்கை, பாகிஸ்தான்...

உணவக உரிமையாளர்: ஏன் இந்தியா பிடிக்கவில்லையா?

ஜெர்மானியர்: மற்ற 3 நாடுகளையும் விட, இந்தியா பிடித்திருக்கிறது. குறிப்பாக, தென்னிந்தியா... தமிழ்நாடும் கேரளாவும் மிகவும் பிடித்திருக்கிறது.

உணவக உரிமையாளர்: ஏன், என்ன காரணம்?

ஜெர்மானியர்: வட இந்தியாவை விட, தென்னிந்தியாவில் கல்வி வளர்ச்சி அதிகமாக இருக்கிறது. வட இந்தியாவில் மதப் பிரச்சாரம் அதிகமாக இருக்கிறது. தென்னிந்தியாவில் மனிதநேயம் அதிகமாக இருக்கிறது. வட இந்தியாவில் அங்கிருக்கும் மக்களுக்கே பாதுகாப்பு குறைவாக இருக்கும்போது, எங்களைப் போன்ற சுற்றுலாப் பயணிகளுக்கு எப்படிப் பாதுகாப்பு இருக்கும்? ஆனால், தென்னிந்தியா பாதுகாப்பாக இருக்கிறது என்றும் கூறியிருக்கிறார். இந்தப் பாதுகாப்பும் பண்பாடும்தான் பெரியாரின் மண், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் உருவாக்கிய தமிழ்நாடு. நம் ‘திராவிட மாடல்’.

### ஃப்ளாஷ்பேக்



எம்.எ.ரகீம்



**நீலகிரியில் தளபதி!**

1980-ஆம் ஆண்டு இளைஞர் அணி தொடங்கப்பட்டபோது, அணியை வலுப்படுத்த அன்றைய இளைஞர் அணி மாநில அமைப்பாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் தமிழ்நாடு முழுக்கப் பயணம் மேற்கொண்டார். குன்னூர் நகரத்துக்கு வருகை தந்த தளபதி அவர்களைக் கண்டதும் எங்களுக்குப் புது உற்சாகம் பரவியது. இந்தப் புகைப்படத்தில் எவரெஸ்ட். மு.கணேசன், அன்றைய இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் பா.மு.முபாரக் இன்றைய சிறுபான்மைப் பிரிவு மாநிலத் துணைச் செயலாளர் இரா.அன்வர் கான், தலைமைக் கழகப் பேச்சாளர் முபாரக் ஆகியோருடன் நானும் இருக்கிறேன்.

**–எம்.எ.ரகீம், கிளைச் செயலாளர், குன்னூர், நீலகிரி மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்


**நாளிதழான ‘முரசொலி’**

1962-இல் ஈ.வெ.கி. சம்பத், கழகத்தில் இருந்து விலகியபோது. சென்னை கடற்கரையில் நடந்த கூட்டத்தில் வேதனையை பகிர்ந்து கொண்டார் பேரறிஞர் அண்ணா. ஆனால், தனிக்கட்சி கண்ட சம்பத்துக்கு. ஏடுகள் அனைத்தும் மிகப்பெரிய வெளிச்சத்தைக் கொடுத்ததோடு, தி.மு.க.-வின் மீது தாக்குதல் தொடுத்தனர். விமர்சனங்களுக்குப் பதிலடி கொடுக்க முடிவெடுத்த கலைஞர், அதுவரை வார ஏடாக வந்த ‘முரசொலி’யை நாளிதழாக மாற்றினார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

435

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.